மலர்-5 இதழ்-101 நவம்பர் 1-16 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

## பெண்நல மருத்துவர்கள் வணங்கும் தாமரைத் தண்டு லிங்கம்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play



www.aanmeegamalar.com e- magazine

## பெண்களை போற்றும் இந்து மதம்

# தொழில் சிறக்க உதவும் 18 மூலிகை சாம்பிராணி

திருஷ்டி பீடை தடை விலக மூலிகை சாம்பிராணி மூலிகை சாம்பிராணி தயாரிக்க தேவையான பொருள்கள்

1.சாம்பிராணி 2.விலாமிச்சை வேர்
3.தும்பை செடி வேர் 4.தேவதாரு மர பட்டை
5.அருகம்புல் 6.குங்கிலியம்
7.வேப்ப இலை 8.நொச்சி இலை
9.வில்வ இலை 10.வெண்கடுகு
11.கருங்காலி மரபட்டை 12.நன்னாரி வேர்
13.வெட்டிவேர் 14.நாய்க்கடுகு
15.ஆலங்குச்சி 16.அரசங்குச்சி
17.நாவல் குச்சி 18.மருதாணி விதை

போன்ற 18 வகையான மூலிகைகளை தனித்தனியாகப் பொடித்து சம அளவு எடுத்து கலந்து காற்று புகாத பாத்திரத்தில் சேமித்து வைத்து உபயோகப்படுத்தலாம்.

இந்த மூலிகை கலவையை கொண்டு தூபம் போடுவதால் கிடைக்கும் நன்மைகள்

1. கணபதி மற்றும் நவ கிரக ஹோமம் செய்த பலனை எளிமையாக பெறலாம் தடைகள் விலகும், எடுத்த காரியங்களில் ஜெயம் உண்டாகும், நவ கிரக தோஷங்கள் தாக்கம் குறையும் எதிரிகள் தொல்லை, இறந் தவர்களின் சாபம் போன்றவை போய் விடும்
2. கடை மட்டும் தொழில் நிலையங்களில் உபயோகப்படுத்த வியாபாரம் பெருகும், எதிரிகள் தொல்லை விலகும்.
3. வீட்டில் நல்ல சக்திகள் நிலை பெறும், வீண் சண்டை, அமைதி இன்மை, தூக்க மின்மை போன்றவை அகலும்.
4. நோய் தொல்லை நீங்கும், எந்த விஷ கிரு மிகள் மற்றும் விஷ ஜந்துக்கள் வீட்டில் தங்காது.



# பிரம்மானந்தம்

எவனொருவன் லாப நோக்கம் இல்லாமல் செய்ய வேண்டிய காரியங்களை ஒழுங்காகச் செய் கிறானோ அவனே ஞானி. ஆத்மாவே ஆத்மாவுக்கு நண்பன். ஆத்மாவை ஆத்மாவினாலே உயர்த்த வேண்டும். இப்படித் தன் சக்தியாலேயே தன்னை வசப்படுத்தியவன். சமநிலையில் இருந்து, தன்னைத் தானே கட்டுப்படுத்தி, அமைதியாக ஜீவாத்மா வடிவத்தில் பரமாத்மாவாக இருப்பான்.

எவன்! ஆத்மாவிலேயே சுகத்தைக் கண்டு, ஆத்மாவையே விரும்பி, தனக்குத் தானே பிரம்மம் ஆகிவிடுகிறானோ அதாவது "ஈஸ்வரன் ஆகிவிடுகிறானோ" அவன் அடையும் ஆனந்தத் துக்குப் பெயர்தான் பிரம்மானந்தம். எவன் இவை யெல்லாம் நான் என்று அறிகிறானோ அவனே நிம்மதி யடைகிறான்.

– பகவத் கீதை



# கண்ணாடி உடைந்தால் வருத்தப்படாதீர்கள்

உடைந்த கண்ணாடி வளையல்களை பெண்கள் அணிந்து கொள்ளக் கூடாது. அந்த உடைந்த விரிச லின் மூலம் கெட்ட சக்திகள் ஊடுருவும் என்பது நம் முன்னோர்களின் கூற்று. நீங்கள் அணிந்து கொண்டிருக்கும் கண்ணாடி வளையல்கள் எதிர் பாராமல் உடைந்துவிட்டால் அதற்கு எந்தக் கெட்ட சகுணமும் இல்லை. உங்களுக்கும், உங்கள் வீட்டிற்கும் இருந்த பெரிய கண்திருஷ்டியாது மறைந்து விட்டது என்றுதான் அர்த்தம்.

உங்கள் வீட்டில் இருக்கும் எந்த ஒரு கண்ணாடி பொருள் உடைந்தாலும், அந்த கடவுளின் ஆசியினால் உங்கள் வீட்டில் இருந்த தீய சக்திகளும், கண் திருஷ்டியும் மறைந்து விட்டது என்பதை தான் குறிக்கின்றது. இதனால் உடைந்த கண்ணாடி பொருட்களை நினைத்து வருத்தம் கொள்ள வேண்டாம்.





# விடங்க லிங்க வழிபாடு செய்தால் தொழில் சிறக்கும்

சிற்பியின் உளியால் செதுக்கப்படாமல் உருவாகும் லிங்கத் திருமேனிகளை விடங்க லிங்கம் மூர்த்தி என்று அழைப்பார்கள். அந்த வகையில்,

திருவாரூர் கோயிலில் புற்றே லிங்கமாக மாறி விட்டதால், விடங்க மூர்த்தியாக காணப்படுகிறார். இவரை வன்மீகர் என்றும், புற்றிடங்கொண்டார் என்றும் அழைப்பார்கள்.

திருவையாற்றில் பிருத்வி எனும் மண்ணே லிங்க பாணமாக, பாறையாக மாறி காட்சி தருகின்றது.

சில இடங்களில் மட்டுமே, மிக அபூர்வமாக கல்லாக மாறிய மரத்தின் அல்லது செடி களின் பகுதிகளே லிங்க பாணமாக விளங்குகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் மணமேல் குடிக்கு அருகில் உள்ள, மஞ்சக்குடி சிவாலயத்தில் லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மரமாகத்திகழ்ந்த ஒரு பகுதி கல்லாக மாறி அதுவே அங்கு சிவலிங்க பாணமாக காட்சி தருகின்றது.

இதுபோன்று சிற்பியின் உளி படாமல் உருவான கோவில்களை அறிந்து அந்த லிங்கத்தை வழிபட்டால் சுய தொழில் செய் பவர்களின் வளர்ச்சி மிகுதியாகும்.

# எது முற்போக்கு?

குடுமி வைத்திருப்பவன் பிற்போக்காளன்; கோயிலுக்குப் போகிறவன் பிற்போக்காளன்; நமது புராணங்கள் யாவும் பிற்போக்கானவை; நமது சாஸ்திரங்கள் யாவும் பிற்போக்கானவை என்பது ஒரு முற்போக்கான கொள்கையாய்க் கொண்டாடப்படுகிறது!

பெயரை மாற்றிக் கொண்டால் முற்போக்கு; நாத்திகம் பேசினால் முற்போக்கு; பிரியாணி சாப்பிட்டால் முற்போக்கு; தொட்டதற்கெல்லாம் மேனாட்டைப் பற்றிப் பேசுவது முற்போக்கு;

நம்மை நாமே இழித்துக் கொள்வதும் நமது விக்கிரகங்களை உடைத்தெறிவதும் முற்போக்கு என்பது மற்றொரு கொள்கை.

உண்மையில் இந்த இரண்டு தன்மைகளை வைத்துமட்டும் முற்போக்கு – பிற்போக்கை இனம் பிரிப்பது அறிவாளிகளின் செயலாகாது.

எவனொருவன் தன்னலம் மறுத்து, மனித குலத்தின் ஒரு பிரிவின் மீதோ, பல பிரிவுகளின் மீதோ, துவேஷம் வளர்க்காமல், பொது வான மனித குலத்தின் வளர்ச்சிக்கும், உன்னத வாழ்க்கைக்கும் பாடுபடுவதற்கு, தான் ஓர் உதாரண புருஷன் என்ற லட்சிய வேட்கையோடு செயலாற்றுகிறானோ; தன் வாழ்வையே அர்ப்பணித்துக்கொள்கிறானோ; அவன் அந்த அளவில் மனித இதயங்கொண்டோரின் மரியாதைக்குரிய முற்போக்குவாதிதான்.



– ஜெயகாந்தன்

# ஜகத் குரு பகவன் ஸ்ரீ நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

யுகங்கள் பொதுவாக 4 வகையாக நமது ஹிந்து தர்மம் கூறுகிறது.

1. க்ருத
2. த்ரேதா
3. துவாபர
4. கலி

இந்த கலியுகத்தின் கோர பிடியிலிருந்து நம்மை ரக்ஷிக்க ஒரு எளிய உபாயத்தை நமது முன்னோர்கள் வகுத்தனர். அதுதான் "நாம சங்கீர்த்தனம்" அல்லது "நாம ஜபம்".

குறிப்பாக நாம சங்கீர்த்தனத்தில் "ராம", "கிருஷ்ண", "நமசிவாய" மற்றும் "ஹரி, நாராயண" மந்திரங்களே பெரும்பாலும் சொல்லப்படும்.

நாம ஜபம் என்பது மிகவும் எளிய உபாயம்தான். அனால் அது அவ்வளவு சுலபமும் அல்ல. நாம ஜபம் என்பது மனம் ஒருமுக நிலையில் ஒரு குறிப்பிட்ட கடவுளின் மந்திரத்தை லக்ஷ கணக்கில், கோடி கணக்கில் ஜபித்து அம்மந்திரத்தை உருவேற்றி, அத்தெய்வீக மந்திரத்தின் அதிர்வலைகள் பரிபூர்ணமாக வியாபித்து, அம்மந்திரத்தின் தேவதை ப்ரத்யக்ஷமாகி அனுகிரஹித்து, அதன் மூலம் மக்களை நல்வழிப்படுத்தி, நமது புராண, கலாச்சாரத்தின் மஹிமையை உணர்த்தி, அறியாமையின் பிடியிலிருந்து விடுவித்து, நமது பாரதத்தின் ஆணிவேரான கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், இறை உணர்வையும் வளர்க்க அந்தந்த காலகட்டங்களில் இறைவன் தன்னை வெளிப்படுத்திய தவறியதில்லை.

எத்தனையோ மஹான்கள் நமது சனாதன தர்மத்தை ரக்ஷிக்க, அந்நியரின் கோர பிடிலியிருந்து நமது தர்மத்தையும், கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும், திருக்கோயில்களையும் மீட்டு இன்று நமது ஹிந்து மதம் மற்ற அனைத்திற்கும் ஒரு முன்னுதாரமாக இருந்ததில் நமது முன்னோர்களின் பங்கு, தியாகம், சிரத்தை வார்த்தைகளால் வருணிக்க முடியாதது.

கலியுகத்தில் நாம சங்கீர்த்தனம் ஒன்றே நாம் உய்யும் ஒரே வழி.

அப்படி நாம ஜெபத்தை தமிழகத்தில் பிரபல்யப் படுத்திவர்களில் ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் முக்கியத்துவம் பெறுகிறார்.

பஜனை சம்பிரதாயத்தின் முதல் குரு என்னும் சிறப்பு பெற்றவர். ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் மற்றும் ஸ்ரீ வேங்கடேச ஐயாவாள் இவரின் சமகாலத்தவர்கள்.

## திரு அவதாரம்



கேசவ பாண்டுரங்கன் சுகுணா தம்பதியருக்கு ஆதி சங்கர பகவத்பாதரின் அம்சமாக 1610 இல் கலியுக ஈஸ்வரனாக திருஅவதாரம் புரிந்தார். இவரின் இயற்பெயர் புருஷோத்தமன்.

இவரின் குரு ஸ்ரீ ஆத்ம போதேந்திரர் என்னும் விஸ்வாதிகேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். பரம அத்வைதி. மஹா ஸ்ரேஷ்டர். இவர் காஞ்சி காமகோடி பீடத்தின் 58 வது பீடாதிபதி. இவரின் பிருந்தாவனம் விழுப்புரம் அருகில் “வடவாம்பலம்” என்னும் இடத்தில் இருக்கிறது. இவரது பிருந்தாவனத்தில் நித்யம் "ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர" என்று ஒலித்து கொண்டே இருக்கும். த்யானம் செய்ய ஏற்ற அருமையான இடம்.

இவரின் தீக்ஷண்யத்தை ஞான திருஷ்டியால் அறிந்த குரு ஆத்ம போதேந்திரர் இவருக்கு ஸ்ரீ போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் திரு நாமம் சூட்டி காஞ்சி காமகோடி பீடத்தின் 59 ஆவது பீடாதிபதியாக்கினார். இவர் காஞ்சி காமகோடி சங்கர மடத்தின் பீடாதிபதியாக இருந்த காலம் 16381692 (54 ஆண்டுகள்).

இவர் தினமும் 1,08,000 ராம நாமஜபம் செய்வார். ஆதலால் இவரின் வாக்கில் கலைவாணியின் சாந்நித்யம் இருந்தது. ராம நாம மகிமையை, ராம நாம ஜெபத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை பஜனை சாம்ராஜ்யத்தின் மூலம் மக்களுக்கு உணர்த்தியதில் முதலிடம் பெறுபவர் இவரே.

இவரும் திரு விசயநல்லூர் ஸ்ரீ வேங்கடேச ஐயாவாள் இருவரும் இணைந்தே கிராமம் கிராமமாகஊர் ஊராக சென்று நாம ஜெபத்தை மக்களிடையே பரப்பினர். இவரால்தான் ராம நாம ஜபம் தமிழகத்தில் அதி விரைவாக பரவியது.

## அற்புதங்கள்

1. ஒரு சமயம் இருவரும் இணைந்து நாம ஜபம் செய்யும் பொழுது ஓர் பிராம்மண தம்பதியின் வீட்டிற்கு சென்று அவர்களின் பிக்ஷயை ஏற்று காது கேளாத வாய் பேசாத அத்தம்பதியின் குழந்தை இவர் உண்ட மிச்ச அன்னத்தை உண்டு அபார ஞானம் பெற்று பேசும் திறன் பெற்றான். இது எப்படி சாத்தியம் என்றால் நித்யம் பகவான் நாமங்களை உச்சரிக்கும் மஹானுபவர்களின் வாக்கில் சரஸ்வதி வாசம் புரிவதனால் அவர்களின் மிச்ச உணவு அதி திவ்யமான அமிர்த ப்ரசாதமாகும்.

2. இவர் யாத்திரை செல்லும் வழியில் ராம நாம ஜபத்தின் மஹிமையை உலகிற்கு உணர்த்த பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் மிலேச்சர்களால் கவரப்பட்ட ஒரு பத்தினியின் பாவம் நீக்கி அவளை பரிசுத்தமாக்கி ராம நாம ஜபத்தின் மஹிமையை உணர்த்தினார். தாரக மந்த்ரமாகிய ராம நாம ஜெபத்தின் மூலம் செயற்கரிய காரியங்கள் பகவத் சங்கல்பத்துடன் நிகழ்த்தியதால் இவர் "ஸ்ரீ ராம நாம போதேந்திரர்" என்றும் அழைக்கப்பட்டார்.

இவர் ஜீவனோடு ப்ருந்தாவனஸ்தரானதால் இவரின் பிருந்தாவனத்தில் நித்யம் ராம் ராம் என்று பகவதோத்தமர்கள் அகண்ட ராம நாம ஜபம் செய்வர். கோவிந்தபுரத்தில் அனைத்து ஊரிலிருந்தும் வந்து ராம நாம ஜெப தீக்ஷை எடுத்து செல்வது வழக்கம்.

இவரது பிருந்தாவனத்தை அடையாளம் காட்டியவர் "மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள்". இவருக்கு நாம் என்றென்றும் நன்றி கடன்பட்டுள்ளோம் ஏனென்றால் இவர் இல்லையென்றால் நம்மால் போதேந்திரரின் பிருந்தாவன ப்ரதிஷ்டாபனம் என்பது சாத்தியமில்லை. இவரின் காலம் 1777–1817.

## கோவிந்தபுரம் அதிஷ்டானம்

கும்பகோணத்தில் திருவிடைமருதூரை அடுத்த கோவிந்தபுரம் என்னும் புனித தலத்தில் இவரின் அதிஷ்டானம் உள்ளது. காவேரி அன்னையின் மடியில் ராமசீதா தர்பாரின் நுழைவாயிலின் முகப்போடு முதலில் ஸ்ரீ ஹனுமானின் விஸ்வரூப தரிசனம். ஆஞ்சநேயரை தரிசித்து நுழைந்தால், ஆஞ்சநேயரின் சந்நிதி மேல் நாம/பஜனை சம்பிரதாயத்தின் ஆணிவேராக விளங்கிய, ஸ்ரீ போதேந்திரர், ஸ்ரீதர ஐயாவாள், நாராயண தீர்த்தர், விஜயதாசர், கோபாலதாசர்,

புரந்தரதாசர், ஜயதேவர், பத்ராசல ராமதாசர் ஆகியோரின் அதியற்புத சிற்பங்கள் தரிசிப்பது பரம புண்ணியம். பூர்வ ஜென்ம புண்ணியம் மற்றும் பகவத் சங்கல்பம் இருந்தால் மட்டுமே நம்மால் இவரின் ஜீவ பிருந்தாவனம் செல்ல முடியும்.

அடுத்து நாம் செல்ல இருப்பது கலியுக ஈஸ்வரனான ஸ்ரீ போதேந்திராள் துளசி மாட அதிஷ்டானம். காவேரியில் ஸ்நானம் செய்து மடியோடு போதேந்திராள் பிருந்தாவனத்தை ராம நாம ஜெபத்துடன் ப்ரதக்ஷிணம் செய்வது அதி ஸ்ரேஷ்டம். நம்மையும் மீறி ஒரு சாந்தம், தெய்வீக அநுபவம் பற்றிக்கொள்வது நிதர்சனம். இவருக்கு செய்யும் பாதுகா பூஜை மிகவும் விசேஷம். ஸ்ரீ போதேந்திராள் பிருந்தாவனத்தை சுற்றியும் பாககவதோத்தமர்களான ஸ்ரீ வ்யாஸர், சுகர், சதாசிவ பிரம்மேந்திரர், ஜெயதேவர், நர்சி மேத்தா, மகா பெரியவா, ராம நாம புத்தக அறை என்று எங்கெங்கு காணினும் குருவின் சாந்நித்யம்தான். நம்மையும் மீறிய ஒரு அபூர்வ அதிர்வலை நிச்சயம் ஸ்ரீ போதேந்திராள் அதிஷ்டானத்தில் நிச்சயம் ஏற்படுவதை உணர முடியம். அடியேன் முதன் முறையாக 19092020 அன்று சென்று வந்து அடைந்த பேரின்பத்தை வார்த்தைகளால் விளக்கமுடியாது.

போதேந்திராள் அதிஷ்டானத்தை அடுத்து கோசாலா. இங்கு ஆநிரைகளை காண்பது மனதிற்கு மகிழ்ச்சியையும், சாந்தத்தையும் ஏற்படும். இங்கிருக்கும் அகத்திக்கீரையை பசுவிற்கு உணவாக அளிப்பது மிகவும் புண்ணியம். ஏனென்றால் கோமாதா ஸாக்ஷத் மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபமல்லவா!!. இந்த கோசாலையில் காஞ்சி காமகோடி பீடாதிபத்யத்தை அலங்கரித்த மஹாநுபாவர்களின் பட்டியலை மிக துல்லியமாக நமது பார்வைக்கு வைத்துள்ளனர். நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொக்கிஷம் இது.

இவரின் பிருந்தாவனத்தை அடுத்து ஸ்ரீ நாம கேந்திரம் என்ற ஓர் இடம். இவ்விடம் ஓர் மிக புண்ணிய இடமாகும். இங்குதான் 1008 கோடி முறை ராம நாமம் எழுதிய ராம நாம வங்கி உள்ளது இதை ஓர் நூலகமாக அமைத்து பொக்கிஷமாக வைத்துள்ளனர். மக்கள் இங்கு வந்து ராம நாம வங்கியை ப்ரதக்ஷிணம் செய்வதை மிகவும் புண்ணியமாக கருதுகின்றனர்.

## அதிஷ்டானத்தை சுற்றியுள்ள கோவில்கள்

சைதன்ய குடீரம், ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயில், காஞ்சி மஹாபெரியவா தபோவனம், இரட்டை ஆஞ்சனேயர் திருக் கோயில், காசி விஸ்வநாதர் கோயில், பாண்டுரங் கன் கோயில், யோகி ராம் சுரத் குமார் ஆசிரமம், ஸ்ரீ ஞானானந்த பாதுகா மடம்.

## ஈஸ்வரப்ராப்தி அடைதல்

இவர் 1692 ஆம் ஆண்டு பூர்ணிமை திதி பாத்ரபத மாதம் பிரஜோத்பத்தி வருடம் விதேகமுக்தி அடைந்தார் என்றும் இவரின் பிருந்தாவனத்தில் ஸ்ரீ ராம நாம ஜபம் கேட்பதாக பலரும் கூறியுள்ளனர்.

## ஸ்ரீ போதேந்த்ராஷ்டகம்

1. ஸ்ரீமந் போதேந்த்ர யோகீந்த்ர
தேஸிகேந்த்ர நமோஸ்துதே !
ஸர்வலோக ஸரண்யஸ்த்வம்
நாம பக்திம் ப்ரயச்ச மே !!

2. த்வம் தாதா ஞானரத்னஸ்ய
த்வம் த்ராதா ஸ்வஜனஸ்யச !
த்வம் மாதா நிஜஸிஷ்யாணாம்
நாமபக்திம் ப்ரயச்ச மே !!

3. ஸ்ரீ மந்ந பீஷ்ட பலத
ஸ்வாமின் ஸம்ஸாரதாரக!
ஜகத்குரோ ஜகந்நாத
நாமபக்திம் ப்ரயச்ச மே !!

4. பகவந்நாம ஸாம்ராஜ்யப்ரபோ
மாம் ஸரணாகதம் !
ஸமுத்தர்தும் க்ருபாஸிந்தோ
நாமபக்திம் ப்ரயச்ச மே !!

5. குரும் ப்ரபத்யே லோகானாம்
த்வாமேவ கருணாலயம் !
க்ருபா கடாக்ஷ லேஸேன
நாமபக்திம் ப்ரயச்ச மே !!

## திருக்கோயில் அமைவிடம்

சத்குரு ஸ்ரீ பகவன் நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அதிஷ்டானம், ஸ்ரீ மடம் சமஸ்தானம் கோவிந்தபுரம் 612 101, தஞ்சை ஜில்லா தமிழ்நாடு

"குரோ:அநுக்ரஹேண ஏவ புமான்
பூர்ண: ப்ரஷாந்தயே"
ஸ்ரீ மத் பாகவதம்

(குருவின் அனுகிரஹத்தால் மட்டுமே மனிதன் பரிபூர்ண சாந்தியை அடைகிறான்)

"ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர"!!!

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# சனாதான தர்ம பொருள் புரிந்தோர் மட்டும் உபதேசம் செய்ய வேண்டும்

இந்து சமயத்தின் மீது பல ஈனர்கள் ஈனத்தனமாக குற்றம் சுமத்தி வருவது வாடிக்கையாகிவிட்டது.

சமுகத்தில் எந்தவித அடையாளம் தெரியாத இவர்கள், தங்கள் பெயர் வெளியே தெரியவேண்டி, இந்துமதத்தைப் பற்றி சர்ச்சைகள், வீண் விதன்டாவாதங்களை முன்வைத்து கருத்து தெரிவித்து, அதன்மூலம் தங்களை பிரபலப்படுத்திக்கொள்வது தற்போதைய விளம்பர யுக்தியாகவே அறியப்படுகிறது.

மேற்கண்ட ஈனர்களின் இந்தச் செயலுக்கு காரணம், இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது சந்ததியினருக்கு இந்துமதக் கருத்தையும், பெருமையையும் தெரியப்படுத்தாமல் விட்டுவிடுவதாலேயே, இந்த குறுக்குப் புத்திக்காரர்கள் இந்து சமயத்தை மட்டும் சாடி வருகின்றனர்.

ஆன்மீக வாழ்க்கையில் வெற்றிகண்டவர்கள், கூறிச் சென்ற பல்வேறு வழிமுறைகளின் தொகுப்பு, பல புராண புத்தகங்கள் உருவாக காரணமாக இருந்ததே தவிர, எந்த கடவுளும் "என்னை அடைய இப்படி நடந்து கொள்ளவேண்டும்" என்ற வழிமுறையை நேரிடையாக கூறியதாக இந்து சமயம் எங்கும் குறிப்பிடவில்லை.

இந்த மொழிதான் கடவுளை அடையும் மொழி என்று எந்த கடவுளும் குறிப்பிடவில்லை, சிவனை தமிழ் மொழியில் தமிழ்நாட்டில் வழிபடும்போதே, கர்நாடகாவில் கன்னடத்திலும், வட இந்தியாவில் இந்தியிலும், மராத்தியத்திலும், இன்னும் பல மொழிகளிலும் வழிபட்டுக் கொண்டுத்தான் இருக்கின்றனர்.

இதனால் இறைவனுக்கு மொழிப் பிரச்சனையும் கிடையாது. பிறக்கும்போது குழந்தைக்கு எந்த மொழியும் கிடையாது, வளரும் சூழலில்தான் மொழி தேவைப்படுகிறது. குறிப்பாக மனித தேவைக்கும், வளர்ச்சிக்குத்தான் மொழி தேவைப்படுகிறது, இறைவழிபாட்டில் மொழியை மையப்படுத்தவில்லை.

மற்ற மதத்தின் கருத்தை, இறை நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்தால், துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனையை அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் வழங்கிவிடுவார்கள்.

ஆனால் இந்து மதத்தில் இந்த போக்கு கிடையாது. அமைதியை ஆராதிக்கும் ஒரே மதம் இந்துமதம், இதனால்தான் பகுத்தறிவு பேசும் கூட்டம் மற்ற மதங்களிடம் அடங்கியும், இந்து மதத்தினரிடம் அத்துமீறி நடந்துகொள்கிறது.

நாய்கள் குறைக்கும்போது அமைதியாக கடந்துவிடும் சூரியனைப்போன்று இந்து மக்களும் கடந்துவிடுகிறோம்.

குறைக்கும் நாய்களுக்கு வாய் வலித்ததும் அடங்கிவிடும். நாயை வளர்க்கும் எஜமானர்களும் நாய் சுறுசுறுப்பாக உள்ளது என்று அதற்கு சாப்பாட்டை தொடர்ந்து வழங்கி பாதுகாப்பார்.

**இந்தியாவில் குறிப்பாக தேர்தல் சமயத்தில் மற்ற மதத்தினரின் வாக்கு தேவைக்கு, அவர்களை மகிழ்ச்சியடையவைக்க இந்து மதத்தை இகழும் போக்கு 1930–ம் வருடங்களுக்குப் பின் தமிழகத்தில் கடைபிடித்துவரப்படுகிறது.**

சரி விஷயத்துக்கு வரலாம்

தற்போது மனு நீதியை கையில் எடுத்து ஒரு கூட்டம் திரிகிறது. இந்து மதம் மனு நீதியைப் பின்பற்றி நடந்து வருவதாக ஊளையிட்டு, பிதற்றி அரசியல் ஆதாயத்தை நாடுகின்றனர்.

அப்படிபட்ட முட்டாள்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியது.

உண்மையில் மனு என்பது ஒரு பதவி, அதாவது ஒவ்வொரு காலத்திலும் ஒரு நீதிபதி இருந்து சட்டம் இயற்றுவார்கள்.

ஸ்ருதி என்றால் மாறாத என பொருள், ஸ்ம்ருதி என்றால் மாற கூடிய சட்டம் என பொருள், அதாவது இயற்றப்படும் சட்டம் கால காலத்துக்கும் மாறும், நிலையான சட்டம் ஆகாது.

தற்போது இந்தியாவில் நீதிமன்றங்கள் போன்று அக்காலத்தில் மன்னர் ஆட்சியில் மக்களும், மன்னர்களும் கடைபிடிக்கவேண்டிய சட்டங்களை வகுத்தனர்.

இப்படி 8க்கும் மேற்பட்ட மனுக்கள் இருந்தார்கள், இவர்கள் இயற்றிய அனைத்து சட்டங்களையும் அக்கால மன்னர்கள், குடிமக்கள் கடைபிடித்து எந்தவித ஏற்றத் தாழ்வும் இன்றியே வாழ்ந்தார்கள்.

இவர்கள் இயற்றிய சட்டங்கள் அனைத்தும் இந்தியாவின் பொதுவான மொழியான சமஸ்கிருதத்தை தழுவிய ஸ்லோகமாகவே அமைந்தது.

இந்த வாழ்வியல் முறையை கடைபிடித்த இந்திய மன்னர்கள் தங்கள் அரசாங்க எல்லைக்குட்பட்ட மொழிகளில் இந்த மனு தர்மத்தை மொழிபெயர்த்து கடைபிடித்து வந்தனர்.

## விளக்கவுரை

பொதுவாக ஒரு நூலுக்கு விளக்கவுரை எழுதுவதற்கு ஒரு தகுதி தராதரம் வேண்டும். விஞ்ஞானம் குறித்த நூலுக்கு விளக்கவுரையை சாதாரண எட்டாம் வகுப்பு படித்த ஒரு நபரால் எழுத முடியாது.

இதுபோன்றுதான் சமஸ்கிருதத்தை தழுவிய மனுநீதியை அந்த மொழி தெரியாத நபர்கள் குருட்டாம்போக்கில் மொழி பெயர்த்து, அதற்கு விளக்கவுரையையும் எழுதியுள்ளனர்.

இதற்கு ஒரு உதாரணத்தை சொல்லலாம், "கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார்" என்கின்றான் வள்ளுவன், இந்த வாக்கியத்தின் பொருள் படிக்காதவர்கள் கண்களை தோண்ட வேண்டும் என்பதா?




ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

"மரம் போல்வர்" என்றால் அவர்கள் மரம் போல் வெட்டபட வேண்டியர்கள் என பொருளாகுமா?

இதெல்லாம் ஞானிகள் மொழி மறை பொருளானது என்பதை விளக்குவது, இப்படி ஏகபட்ட ஞானிகள் ரிஷிகள் மொழிகளை சொல்லலாம்.

மிக சிறிய ஓலையில் எழுதபட வேண்டும் என்பதாலும், ஞானம் இருப்பவன் மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்,அதுவும் அவன் தேடி தேடி கண்டறிய வேண்டும் எனும் நுணுக்கமான ஏற்பாட்டிலும் செய்யபட்ட விஷயம் அது.

இரண்டு வரிகளில் ஏழு வார்த்தைகளைக் கொண்ட ஒரு திருக்குறளுக்கு முழு விளக்கத்தை தரவேண்டுமென்றால் அதை பகுத்து பிரித்து மூலத்தை அறிந்து எழுதினால் கூட இரண்டு பக்கத்திற்கு மேல் பொருளை எழுத வேண்டிவரும்.

அதை புரிந்து கொள்ள மிகபெரும் முயற்சியும் ஞானமும் இறைசிந்தனையும் அவசியம், இதனாலே சனாதான தர்மம் அதன் பொருள் புரிந்தோரை மட்டும் உபதேசம் செய்ய அனுமதித்தது.

மனு தர்மத்தில் பிராமணர்களுக்கு முக்கியத்துவம் தரச் சொல்லியுள்ளது என்று ஒருசிலர் புலம்புகின்றனர்.

பிராமணனின் கழிவு உணவு உடை எல்லாம் சூத்திரனுக்கு கொடுங்கள் என மனு சொன்னதாக சொல்லுகின்றீர்கள்

இதன் உண்மை பொருளை சிந்தித்துப் பார்த்தோமானால் இந்திய தர்மம் அதை இப்படி விளக்குகின்றது

அதாவது உன் வீட்டில் பந்தி நடந்தால், அன்னதானமோ கொடைகளோ நடந்தால் மறை ஓதும் அடியவருக்கு முதலில் உணவிடு, உடை தானம் செய்தால் அவர்களுக்கு முதலில் கொடு என்பதே தத்துவம்.

இது இன்றுவரை கடைபிடிக்கபடும் இந்து தர்மம், இந்திய தர்மம்.

இந்த தர்மத்தை இந்து மதம் மட்டுமல்ல, கன்னியாகுமரி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் பெரும்பாலும் இன்றும் கிறிஸ்தவர்கள் கடைபிடித்து வருகின்றனர். இதுபோன்ற மாவட்டங்களில் அயல் சனங்களுக்கான "விருந்தான அசனம்" அடிக்கடி நடக்கும்.

அப்பொழுது முதல் உணவு யாருக்கு வழங்கபடும் தெரியுமா? அங்கிருக்கும் அருட் தந்தைக்கு, அடுத்து யார் உண்பார்கள் தெரியுமா?

ஆதரவில்லாத, பிச்சைகோலத்தில் இருக்கும், மகா அடிமட்ட ஏழைகளுக்கே அங்கு முதல் பந்தி நடத்தபடும், இவர்களுக்கு புண்ணிய ஆட்கள் என பெயர், அதாவது அவர்களுக்கு முதல் பந்தி செய்தல் என்பது புண்ணியம். பசியால் வாடும் அவர்களுக்கு நல் உணவு ஊட்டுதல் புண்ணியம்.

ஆம், அன்னதானத்தில் மறைபொருள் மேதைகளையும் ஏழை மக்களையும் முன்னிறுத்து என்பதே இந்து தர்மம், இந்த மனு நீதியை மேற்கண்ட மாவட்டங்களில் கிறிஸ்தவர்கள் இன்றும் கடைபிடித்து வருகின்றனர்.

இதற்கு உண்மை பொருள் என்ன தெரியுமா?

மந்திரம் ஓதுதல் தவிர வேறு தொழில் தெரியா அந்தணனை, சம்பாதிக்க தொழில் செய்யாமல் வேதம் ஒன்றிலே வாழ்பவனை நீ ஆதரிப்பாய் என பொருள்.

இன்றும் கிறிஸ்தவ சன்னியாசிகளை கிறிஸ்தவர் ஆதரிப்பது அவ்வகையே, சீனா, இலங்கை போன்ற புத்த நாடுகளிலும் இதே தர்மம் உண்டு, அவர்களும் நமது மனு தர்மத்தில் கூறப்பட்ட இந்த வழிமுறைகளை கடைபிடித்து வருகின்றனர். எந்த பண்டிகையோ, விஷேசங்களோ நடைபெற்றால் முதலில் புத்த துறவிகளுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படும். இவர்கள் பரிதாபத்துகுரியவர்கள், உதவி தேவைபடுபவர்கள் மனு தர்மப்படி கூற வேண்டுமென்றால் புண்ணியம் தேட கூடிய வழி சொல்பவர்கள், அவர்களுக்கு முதலில் உதவிடு என்பதே.

பிராமணனின் இயல்புகளில் ஒன்று தானம் பெறுதல் என வரையறுக்கின்றது இந்திய தர்மம். ஆனால் மனு தர்மம் கால சூழ்நிலைக்கேற்ப மாறும் இயல்பு கொண்டதால், இன்று பிராமண சமுதாயம் படித்து பல்வேறு பணிகளை செய்து பொருள் ஈட்டி அவர்களின் தேவையை அவர்கள் பார்க்கும் அளவிற்கு வளர்ந்துள்ளதால், இன்று இந்தியாவில் எந்த அன்னதான கூடத்திலோ, பந்தியிலோ அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது கிடையாது.

## பிரச்சனைக்குரிய மனுஸ்மிருதி

மனு தர்மம் என்பதை இந்தியர்கள், இந்துக்கள் அனைவரும் அவசியம் பின்பற்ற வேண்டும் என்ற சட்டம் இல்லை, ஆனாலும், நமது இந்திய அரசர்கள் குறிப்பாக தமிழகத்தில் மனுநீதி சோழன் கடைபிடித்து இன்றும் உலகப் புகழ் பெற்றுள்ளான்.

பசுவின் கன்றை அறியாமல் கொன்றதற்கு ஈடாக, தனது மகனையே தேரின் சக்கரத்தில் பலியிட்டு நீதியை நிலைநாட்டியதால், இன்றும் இந்திய நீதி மன்றங்களில் நீதிபதிகளுக்கு முன்னோடியாக மனு நீதி சோழன் திகழ்கிறான். சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுநீதி சோழனுக்கு சிலை வைத்து போற்றப்படுகிறது.

நமது மனு நீதி சோழனை பின்பற்றிய, "தவறுக்கு நிகரான தவறே தண்டனை"யாக பல இஸ்லாமிய நாடுகளில் தரப்பட்டு வருகிறது, குறிப்பாக சவுதி, ஈரான், ஈராக் போன்ற இஸ் லாமிய நாடுகளில் கொலை, அங்கங்களை சேதப்படுத்துதல் போன்ற தவறுகளை செய்தால், குற்றவாளிக்கும் அதையே தண்டனையாக தருகின்றனர்.

மனு ஸ்மிருதியை எழுதியது யார்? அதற்கான வரலாற்று ஆவணங்கள் உள்ளனவா? இந்தியாவில் எப்போது, எந்த காலகட்டத்தில் மனு நீதி கடைபிடிக்கப்பட்டது? என்ற எந்த கேள்விக்கும் விடைதெரியாத மூடர்கள், தற்போது ஹிந்துக்கள் கடைபிடிக்காத, ஹிந்துக்களின் நாடுகளில் பின்பற்றப்படாத விஷயங்களை மேற்கோள் காட்டி, ஹிந்துக்களை கீழ்த்தரமாக விமர்சனம் செய்வதற்கும் ஒருசில அரசியல் காரணம் உண்டு.

உலகை கொள்ளையடித்த வெள்ளைக்காரக் கூட்டம், முதலில் கொள்ளையடிக்கும் நாட்டின் கலாச்சாரத்தையும், தெய்வ நம்பிக்கையையும் சீர்குலைக்கும், அதற்கு பின்பு தங்களது மதத்தை பரப்பிவிடுவதை வழக்கமாக கொண்டது.

அந்த வகையில் சர். வில்லியம் ஜோன்ஸ் என்ற ஆங்கிலேயன் 1794ம் ஆண்டு மனுஸ்மிருதி என்ற நூல் எழுதினான், இந்த நூலில், இஸ்லாமியர்கள் ஷரியத் முறையை பின்பற்ற வேண்டும் என்றும், இஸ்லாமிய மற்றும் ஹிந்து சட்டவிதிகளை, பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் இருந்த நெறிமுறைகளை, சமய மற்றும் சமூக கட்டமைப்புகளை, தங்களின் ஐரோப்பிய முறைப்படியான கருத்துக்களோடு திணித்து மாற்றியமைத்தது அன்றைய ஆங்கிலேயே நிர்வாகம் என்று அப்துல்லா 'அகமது அன்நைம்' என்ற இஸ்லாமிய அறிஞர் குறிப்பிட்டார்.

இந்த மனு தர்ம நூல் 1887–ம் ஆண்டு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் உண்மைக்கு புறம்பானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதுபோன்று இந்துமதத்திற்கு எதிராக 50–க்கும் மேற்பட்ட மனுஸ்மிருதி பதிப்பு கள் உள்ள நிலையில், இவைகளில் பெரும்பாலானவை அந்நியர்களால் எழுதப்பட்டவை, இது மட்டுமல்ல இந்து மதத்திற்கு எதிரான அமைப்பை நடத்திவரும் தி.க.வீரமணிகூட மனு தர்மத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளான்.

தமிழ் மொழியே காட்டுமிராண்டி மொழி, திருக்குறள் புனித நூல் இல்லை என்று கூறிய கன்னடர் பெரியார் உருவாக்கிய அமைப்பின் சொத்துக்களையும், அமைப்பையும் நிர்வகிக்கும் வீரமணிக்கு இந்தி தெரியாது, சமஸ்கிருதம் தெரியாது, ஆனாலும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட மனுதர்மத்திற்கு விளக்கவுரையை எப்படி எழுதினார் என்பது புரியவில்லை.

இதுபோன்ற முட்டாள்கள் பலர் பல்வேறு மனு தர்ம நூல்களுக்கு விளக்கவுரை அவர்களே எழுதி, அவர்களே எதிர்த்து போராட்டம் நடத்தி தமிழக மக்களை முட்டாள்களாக்கிவருகின்றனர்.

இந்து மதம் என்ற பெயர் வைப்பதற்கு முன்பே,




உலகம் முழுவதும் பரவியிருந்த இந்துக் கடவுள்களுக்கு எதிராக எத்தனையோ சக்திகள் தோன்றினாலும், அவை தானாகவே அழிந்துவிடும்.

எத்தனை அரக்கர்களை சமாளித்துள்ளது இந்துமதம், தன்னைத் தவிர யாரையும் வணங்கக்கூடாது என்று கூறிய இரண்ய கசிபு, மகிஷாசுரன், போன்ற எத்தனையோ அரக்கர்களை சமாளித்தும் இன்றும் தழைத்து நிற்கிறது.

எத்தனையோ கொள்ளைக்காரர்கள் இந்தியாவில் கொள்ளை, கொலை போன்றவற்றை நிகழ்த்தியும் அழியாத இந்து மதம் மற்றும் இந்து கடவுள்கள் மீது தற்போது புரளிச் செய்தியை வெளியிட்டு, இந்துமதத்தை இழிவு செய்ய உலக அளவில் பல்வேறு இயக்கங்கள் தோன்றியுள்ளது.

அந்த இயக்கங்களுக்கு நிதி வருவதை தற்போது தடைசெய்யப்பட்டுள்ளதால் அவர்களின் கைக்கூலிகளாக பல்வேறு தமிழக அரசியல் பிரபலங்கள் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

இதுபோன்ற கயவர்களை வேறறுக்க, இந்து சமய நூல்கள், கடவுள் பற்றிய விவரங்களை ஒவ்வொரு இந்துக்களும் தங்களது சந்ததியினருக்கு தெரியப்படுத்தி வளர்ப்பதே தீர்வாகும்.

www.aanmeegamalar.com


www.aanmeegamalar.com

# பெண்நல மருத்துவர்கள் வணங்கும் தாமரைத் தண்டு லிங்கம்

எங்கும் இருப்பவன் இறைவன், என்பதை பல் வேறு புராண கதைகளின் மூலம் உலகிற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் சிவலிங்கத்தின் ரூபங்கள் கூட பல்வேறு விதத்தில் காட்சியளிப்பதை பார்த்திருப்போம், இராமேஸ்வரத்தில் சீதா தேவியின் கைகளால் உருவாக்கப்பட்ட மண்ணால் ஆன லிங்கம், அந்த மண் லிங்கத்தின் மீது சந்தேகம் அடைந்த வர்களின் சந்தேகத்தை போக்க, உப்பால் லிங்கத்தை செய்துகாட்டிய, அந்த லிங்கத்தை அங்கேயே பிரதிஷ்டை செய்தும் காண்பித்தார். இதைப்போன்று ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு வகையான லிங்கள் உருவாகியுள்ளது.

அந்த வகையில், தஞ்சை மாவட்டம் பேரா வூரணி அருகே பெருமகளூர் என்ற சிறு கிராமத் தில் உள்ள ஸ்ரீசோமநாதர் சிவாலயம் மிகவும் வித்தியாசமான, சக்திவாய்ந்த, மகாலட்சுமி கடாட்சம் நிறைந்த தலமாக விளங்குகிறது.

பேராவூரணி அத்தாணி கட்டுமாவடி பஸ் மார்க்கத்தில் பேராவூரணியிலிருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் இப்பழமையான சிவாலயம் அமைந்துள்ளது.

## தாமரைத் தண்டு லிங்கம்

இங்கு அருளாட்சி புரியும் ஸ்ரீசோமநாதர் கல்லால் அமையப் பெறவில்லை. தாமரைத் தண்டினால் ஆன சிவலிங்கம். பாணலிங்கமே தாமரைத் தண்டினால் வடிக்கப்பெற்ற இத்தகைய அபூர்வமான சிவலிங்கத்தைப் போல் உலகின் வேறு எந்த இடத்திலும் அமையப்பெறவில்லை.

தாமரைகளில் பல்லாயிரம் வகைகள் உண்டு. பூலோகத்தில் நாம் காண்பது ஒரு சிலவே. பூஜ்ய தாமரை, புவனத் தாமரை, பங்காரு தாமரை, சாரூப தாமரை, ஐஸ்வர்ய தாமரை, ஆலோல தாமரை இவ்வாறாகத் தாமரைகளில் பலவிதங்கள் உண்டு. ஆனால் அனைத்து தாமரையும் மகாலட்சுமிக்கு உகந்த மலர், இந்த தாமரைத் தண்டினால் ஆன லிங்கமாக ஸ்ரீசோமநாதர் சிவாலயம் திகழ்வதால், இந்த சிவபெருமான் லட்சுமி கடாட்சம் அளிக்கும் லிங்கமாக காட்சியளிக்கிறார்.

## ஸ்ரீதிரிபுவன சித்தர்

பல யுகங்களுக்கு முன் ஸ்ரீதிரிபுவன சித்தர் என்பவர் ஓர் அரிய தவத்தை மேற்கொண்டார்.


அலங்காரத்திற்கு முன் தாமரைத் தண்டு லிங்கம்


நந்தி மண்டபம்

பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்ற மூன்று லோகங்களிலும் பெறற்கரிய ஒரு தெய்வீகத் தாமரைப் புஷ்பத்தைச் சிவனருளால் பூலோகத்திற்குக் கொண்டு வர விரும்பினார்..

இவருடைய கடும் தவத்தைக் கண்டு முப்பத்து முக்கோடி தேவர்களும், மஹரிஷிகளும் அஞ்சினர். சித்தர்களுடைய திருவிளையாடலே இப்படித்தான். அனைத்தையும் இறையருளால் ஆற்றும் வல்லமை பெற்றிருந்தாலும் மேலும் மேலும் தபஸ் செய்து கொண்டே இருப்பார்கள்.

ஸ்ரீதிரிபுவன சித்தரின் தவத்தின் மஹிமையால் அவரருகே ஒரு தாமரைத் தண்டு வளரத் தொடங்கி, அது உயர்ந்து உயர்ந்து பல அண்டங்களையும் தாண்டிச் சென்றது.


இதற்கான காரணம் தெரியாமல் விழித்த தேவர்களும், மகரிஷிகளும் மும்மூர்த்திகளை நாடி, இதற்கான காரணத்தை அறிய முற்பட்டனர். மும்மூர்த்திகளும் இதற்கான விடையை சித்தர்களின் தலைவரான அகஸ்தியருக்குத்தான் தெரியும் என்று கூறிவிட்டனர்.

அனைவரும் அகஸ்தியரை நாடிச்சென்று தாங்கள் வந்த நோக்கத்தை கூறினர்....

ஸ்ரீஅகஸ்தியர் அனைவரையும் முக மலர்ந்து வரவேற்றார். "ஸ்ரீசிவபெருமான், ஸ்ரீஅர்த்த நாரீஸ்வரராக ஆயிரத்தெட்டுக் கலைகளையும் ஒன்றாக்கி இன்றைக்குத் திருக்கயிலாயத்தில் நடனம் ஆட இருக்கிறார். அத்திருநடனத்தில் உங்களுக்கு விளக்கம் கிட்டும்" என்றார்.

ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரர் தம் நடனத்தினூடே தம் சிரசிலிருந்து தம் திருமுடி ஒன்றை உருவி எறிந்திட அத்திருமுடியிலிருந்து வீசிய பரஞ்ஜோதி


தாமரைத் தண்டு லிங்கம்


கோவில் அமைப்பு


லிங்கம் தோன்றிய குளம்

கண்ணைப் பறித்தது. எங்கு செல் கிறதோ என்று காண முடியா வண்ணம் ஒளிக்கற்றைகளுடன் பலகோடி சூரியன்கள் பிரகாசித்துப் பல விண்ணு லகங்களையும் வலம் வந்தது அத்திருமுடி.

அனைவருக்கும் ஒன்றும் புரியவில்லை. திரிமூர்த்திகளே திகைத்து நின்றனர். 'இறை வனின் ஒரு திருமுடியைத் தாங்கும் சக்தி எந்த லோகத்திற்கும் இல்லையே! என்ன செய்வது? மீண்டும் இத்திருமுடியைத் திருக்கயிலாயத்திற்கு அழைக்கும் வல்லமை ஸ்ரீஅகஸ்தியருக்கு மட்டுமே உண்டு. அவரோ, மௌனியாய் நிற்கிறாரே!" தேவர்களும், மஹரிஷிகளும் திகைத்தனர்.

அப்போது ஸ்ரீஅகஸ்தியர் தம் திருக்கரங்களை அசைக்க.. பூலோகத்தில் ஸ்ரீதிரிபுவன சித்தரின் அருந்தவத்தால் ஒரு தாமரைத் தண்டு பல லோகங்களையும் தாண்டி வளர்ந்ததல்லவா? அத்தாமரைத் தண்டின் நுனியை ஸ்ரீஅகஸ்தியர் பற்றியவாறே ஓம் "ஓம் நமசிவாய" என்று துதித்து அத்திரு நாமத்தில் லயித்து நின்றார்.

கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் அங்கு தோன் றிய ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரரின் திருமுடி அத்தாமரைத் தண்டினுள் சென்று ஐக்கியம் அடைந்தது. இத்தாமரைத் தண்டிற்கு இவ்வளவு சக்தியா? என்று அனைவரும் கட்டுண்டு நின்றனர்.

ஸ்ரீதிரிபுவன சித்தரின் அற்புத தவசக்தியில் விளைந்த தாமரைத் தண்டல்லவா? ஸ்ரீஅகஸ்தி யரின் திருக்கரம் பட்டவுடன் அதன் சக்தி பலகோடி மடங்குகள் பெருகியது.

ஸ்ரீஅகஸ்தியர் கைகூப்பி வணங்கி அத் தாமரைத் தண்டினை லேசாக அசைத்திட, ஸ்ரீஅர்த்த நாரீஸ்வரரின் தேஜோமயமான திரு முடியைத் தாங்கிய அத்தாமரைத் தண்டு சுருங்கத் தொடங்கிற்று. அதன் உயரம் குறைந்து கொண்டே வந்து பூலோகத்தில் ஸ்ரீதிரிபுவன சித்தர் அமர்ந்திருந்த இடத்தில் சந்தன நிறத்தில் ஒரு பெரும் தாமரைத் தண்டாய் மாறிட., அதன் நுனியில் ஓர் அற்புதத் தாமரை மலர் உருவாயிற்று. சுற்றிலும் ஒரு தடாகம் ஏற்ப்பட்டது, அத்தடாக நீர் திருக்கயிலாயத்திலிருந்து ஸ்ரீசிவபெருமானின் சிரசிலிருந்து பெருகிய கங்கை நீர் ஆகும்.

இத்தடாகத்தில் அற்புதத் தாமரை மலர்கள் தோன்றின. தம் தவத்தின் நோக்கம் இறையருளால் நிறைவேறியதை உணர்ந்த சித்தர் கண்களைத் திறந்தார். அத்தாமரைத் தண்டு லிங்கமாக மாறிட, அத்தாமரை மலர், ஸ்ரீகுந்தளாம்பிகை அம்பாளாகத் தோற்றம் பெற்றது. ஸ்ரீதிரிபுவன சித்தரின் அற்புத தவத்தால் ஸ்ரீசோமநாதர் ஸ்ரீகுந்தளாம்பிகை தெய்வத் திருமூர்த்திகளுக்கு அங்கேயே ஒரு



புதுப்பிப்பு பணியின் போது கோவில் அமைப்பு

ஆலயம் நிர்மாணித்து பூஜித்து வந்தனர்.

நாட்கள், ஆண்டுகள், யுகங்கள் செல்லச் செல்ல பல்வேறு பிரளயங்கள் காரணமாக ஒருசில கோவில்கள் பூமியில், ஜலத்தில், மண்ணில் அமிழ்ந்துவிடுவது வழக்கம், இப்படி மறையும் கோவில்கள், ஒருசில காலகட்டத்தில், காலத்தேவைக்கேற்ப ஒருசிலரால் மீட்டெடுக்கப் படும், அவ்வாறு மீண்டும் எழுச்சிபெறும் தலங்கள் மிகவும் சக்திவாய்ந்த தலங்களாக விளங்கும்.

(இதன் காரணத்தால்தான் புதிதாக கோவில் கட்டுவதைவிட, பாழடைந்த கோவில்களை புதுப் பிக்க நம் முன்னோர் கூறியுள்ளனர். பழைய கோவிலை புதுப்பிக்கும்போது, அந்த கோவிலின் மூலவர் தோன்ற காரணமாக இருந்த மகான் முனிவர்களுக்குரிய சக்தியும் அபரிமிதமாக வெளிப்படும்.)

ஸ்ரீதிரிபுவன சித்தரால் உருப்பெற்ற ஸ்ரீசோம நாதர் சிவலிங்கம் காலப்போக்கில் தடாக நீரினுள் அமிழ்ந்தது. சிவநெறிச் செல்வனான ஒரு சோழ மாமன்னன் வளர்த்து வந்த யானை இத்தடாகத் தாமரையை உண்ண முற்பட்டு தாமரை இதழ்களை பறிக்கும்போது, ஒரு தாமரையிலிருந்து இரத்தம் பீறிட்டுத் தடாக நீரே செங்குருதியாயிற்று. இந்த செய்தியை கேட்டு தடாகத்திற்கு விரைந்த சோழ மன்னன், தடாகத்தில் இருந்த நீரை அகற்றி பார்த்தபோது, ஆங்கே ஓர் அற்புதமான தாமரைத் தண்டாலான சிவலிங்கம் இருப்பது கண்டு ஆச்சரியமடைந்தார்.

"சுவாமி! அபசாரம் செய்து விட்டேனே! தங்கள் திருமேனிக்கு என்னால் தீங்கு வந்து விட்டதே! மன்னன் குற்றம் மக்களைச் சாருமே. சிவபெருமானே! என் பிழையைப் பொறுத்து மன்னிக்க வேண்டுகிறேன்" என்று கதறியவாறு தாமரைத் தண்டாலான லிங்கேஸ்வரரைக் கட்டித் தழுவினான்.



கீதா-ராஜன்

மன்னனின் மார்பில் ஒளிர்ந்த முத்து மணிகள் தாமரைத் தண்டில் பதிந்தன. அம்முத்து மணி களின் பதிவுகள் அரை வட்டங்களாக லிங்கத்தில் பொதிருந்திருப்பதை இன்றும் காணலாம். சிவபெருமான் அந்த அன்பில் களித்து, "சோழ மன்னனே! எம் சிவாலயம் உன்னால் இங்கு அமைய வேண்டும் என்ற எம் விருப்பத்தின் விளைவே இத்திருவிளையாடல். இங்கு எமக்கு ஒரு திருக்கோயில் எழுப்புவாயாக! என்று இறை ஆணை ஒலிக்க கலியுக மக்களுக்கு அருள் புரிய மீண்டும் எழுந்தருளினார் சோமநாதர்.

## ஸ்ரீசோமநாதர் பெயர் வர காரணம்

தசரத மகாராஜா குழந்தை வரம் வேண்டி, புத்திரகாமேஷ்டி யாகம் தொடங்கும் முன், மாபெரும் சோம யாகம் நடத்த எண்ணி தக்க இடத்தை தேர்ந்தெடுக்கு மாறு குலகுருவான வசிஷ்டர் மகரிஷியை வேண்டியுள்ளார்.

சோம யாகத்திற்கு பெயர் பெற்ற தஞ்சை மாவட்டத்தில் உள்ள அம்பர் மாகாளம் என்னும் திருத்தலத்தில் அவ்வாண்டு வசிஷ்டர் குறித்த தேதியில் வேறு ஒரு சோம யாகத்தை நிகழ்த்த அவ்வூர் மக்கள் நிச்சயித்து இருந்தனர். அத்தேதியில் செய்யாவிடில் அதற்கு அடுத்த சரியான தேதி மூன்று ஆண்டு கழித்து வருவதால் தசரத மகாராஜா அம்பர் மாகாளத்திற்கு ஈடான திருத்தலத்தை பெற்றுத் தருமாறு வஷிஷ்டரை வேண்டியுள்ளார்.

வசிஷ்டர் கைலாயம் சென்று அகத்தியரை நாடி விளக்கம் வேண்டினார். திரிபுவன சித்தர் தவ செய்த இடமான, பெருமகளூரே, பூலோகம், பூவர்லோகம், சுவர்லோகம் என்ற மூன்று லோகங் களினும் சோம யாகம் செய்ய சிறந்த இடமாகும். அத்துடன் அம்பர் மாகாளத்திற்கு ஈடான சிவ தலமாகும். மேலும் இங்குள்ள மூலவர், இந்த யுகத்திலி ருந்து சோமநாதர் என்ற திருநாமத்தை தாங்கி அச்சிவலிங்க மூர்த்தியாக அருள்பாலிப்பார் என்று அகத்தியர் விளக்கம் தந்திட, தசரத மகாராஜா இப்பெருமகளூர் சிவலத்தில் பெரும் சோம யாகத்தை இயற்றினார். சேதுகரை செல்லுகையில் ராமன் இத்தலத்தை பூஜித்துள்ளார்.

இக்கோவில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் ஆகும். இந்த கோயில் குலோத்துங்க சோழனாலும், பாண்டிய மன்னர்களாலும் பராமரிக் கப்பட்டுள்ளது.பின்னர் தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய மன்னனான பிரதாபசிம்மன் பெருமகளூர் கோயிலுக்கு வழங்கிய நன் கொடையினை பற்றிய கல்வெட்டும் இங்கு கண்டறியப்பட்டுள்ளது.

## கோவில் அமைப்பு

கிழக்கு நோக்கிய திருவாயில், திருமதில் திருச் சுற்று, பரிவாராலயங்கள், இடப்பக்கத்தில் நந்தி மண்டபம், பலிபீடம் ஆகியவை அழகு செய்ய, சிதிலமடைந்த நிலையில் மூலவர் விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், அம்மன் சன்னதி ஆகியவற்றுடன் திருக்கோயில் விளங்குகின்றது.

## நந்தி மண்டபம்

மகாமண்டபத் தூண்களில் அழகிய கலை வேலைப்பாடும், புராணக்கதைகளை விளக் கும் சிற்பக்காட்சிகளும் விளங்குகின்றன. விநாயகப் பெருமான் அருள் காட்சி நல்க, குந்தளாம்பிகை அம்மன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றாள். சிவனது மூலஸ்தானத்தில் சதுர வடிவ பீடத்தில் சுயம்பு லிங்கமாக பாணம் விளங்க, சோமநாதரின் மூலவர் திருமேனி காட்சி தருகின்றது.

## லிங்கத்தின் அமைப்பு

ஆவுடையார் என்னும் கருங்கல்லால் அமைந்த சதுர பீடத்தில், விடங்க மூர்த்தியாக சோமநாதர் பாண வடிவத்தில் காட்சி தருகிறார். பொதுவாக கல்லால் அமைக்கப்பெறும், லிங்கத் திருவுருவங்களின் பாணம், வட்ட வடிவில் தான் இருக்கும். பல்லவர் கால தாரா லிங்கங்கள் மட்டும் பட்டை பட்டையான வடிவில் பாணம் காணப்பெறும், சகஸ்ரலிங்கங்களில் ஆயிரம் சிறு லிங்க வடிவங்கள் ஒரே பாணத்தில் செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு விடங்க வடிவமாகும். விடங்கம் என்பது, சிற்பியால், உளி கொண்டு செதுக்கப்படாத திருவடிவமாகும்.

## பலன்கள்

பெண் குழந்தை இல்லாதோர் மற்றும் துன்பங் களை அனுபவிக்கும் பெண்கள் வேண்டிக் கொண்டு வழிபட்டால் குறைகள் நீங்கும் என கூறப்படுகிறது. திருமணத்தில் தடைஉள்ள பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். பெண்களுக்கு சுகப்பிரசவம் நடைபெறவும் சிறப்பு பிரார்த்தனை செய்யப்படுகிறது. இதனால் பெண் மருத்துவர்கள் பலர் இங்கு வழிபாடு செய்ய வருகிறார்கள்.

மேலும் தொடர்பு எண் 9047958135

– தொகுப்பு கீதா ராஜன்

தொடர்பு எண்: 8825844033

# காஞ்சி பெரியவர்

## சிறிய அளவிலான குறிப்புகள்

- இளம் வயதிலேயே சந்நியாசம் மேற்கோண்ட காஞ்சி சங்கர மடாதிபதியாவார்.
- 13 வயதிலேயே அப்பொறுப்பிற்கு வந்தவர்.
- நான்கு வேதம், ஆறு சாஸ்த்திரம் புராணங்களை சுயமாக கற்றுத் தேர்ந்தவர்.
- சுமார் 18 மொழிகளில் பேச எழுத படிக்கத் தெரிந்தவர்.
- தமிழ் மொழி, குறிப்பாக கல்வெட்டு மொழிகளில் இலக்கணத்தோடு விவாதிக்கும் ஆற்றல் பெற்றவர்.
- இந்து மத வேதங்கள் உபநிடதங்கள் தழைக்க அருளியவர்.
- எண்ணற்றவசதிகள் அருட்கொடையாளர்கள் வழங்கிய போதும் கால்நடையாகவே இந்தியா முழுவதும் மும்முறை வலம்வந்து ஒவ்வொரு 15Km அருகிலுள்ள கிராமத்தில் தங்கி பக்தி நெறி பரப்பியவர்.
- எவ்வளவு வசதிகளிருப்பினும் மாட்டுத்தொழுவத்தில் கொசுக்கடியில் படுத்துறங்கியவர்.
- எண்ணற்ற உணவுகள் வந்தும், அதைத் தவிர்த்து நெல் பொறி போன்ற ஆகாரம் அதுவும் ஒருவேளை மட்டும் உண்டு வாழ்ந்தவர்.
- எளிமையான மக்களுக்கு பக்தி நெறியே சிறந்தது என அருளிய அருட்கொடையாளர்.
- 100வது ஆண்டில் சில மாதங்கள் வாழ்ந்தவர்.
- அதிகப்படியான 88 சாதுர்மாஸ்யம் என சந்திர பிறையை பார்த்தவர் (சந்யாசிகளின் வயதை கணக்கிடும் முறை)
- உலகம் முழுவதுமுள்ள இந்துக்களின் ஆன்மீக குரு. மேலும் எண்ணற்ற மனிதர்களின் ஜாதி மதம் கடந்த ஆதர்ஸன குரு
- போப் ஜான் பால் 2, முகம்மது கொமேனி, தலாய் லாமா, போன்ற பிற மத ஆன்மீக குருமார்கள் இவருடன் பேசி தொடர்பில் இருந்தார்கள்.
- இவர் சமாதி அடைந்த நேரத்தில் எண்ணற்ற முஸ்லீம்கள் / கன்யாஸ்த்திரிகள் சிந்திய கண்ணீரைப் பார்த்து இந்து மதத்தினர் கூட ஆச்சர்யபட்டார்கள்.
- Queen Elizabath / Canadian President முதல் உள்ளூர் அரசியல் பிரமுகர் வரை இவரிடம் தனி மதிப்பு வைத்திருந்தனர்.
- கடவுள் நம்பிக்கையற்ற M.R.ராதா, ப்ளீட்ஸ் ஆசிரியர் கரஞ்சியா, கண்ணதாசன் போன்றோரும் பின்னாளில் இவரை சந்தித்து ஆன்மீகவாதியானார்கள்.
- கலைஞர் அவர்களின் காஞ்சியிலே ஒரு பெரியவருண்டு என்ற பேச்சு இவரது உள்ளன்பை வெளிப்படுத்திய கட்டுரையாகும். முனி வாழ்க்கை வாழ்ந்தார் எனவும் பேசியுள்ளார்.
- காஞ்சி சங்கரமடத்திற்கு ஒட்டியுள்ளசிறு மசூதி தாமே மனமுவந்து வழங்க வந்த போது அதை மறுத்து உங்களின் பாங்கொலியில் அல்லாவிடமிருக்கிறேன் என பகர்ந்தவர். 5 வேளை தொழ முஸ்லீம்களை வலியுறுத்தியவர்.
- உலகப் புகழ் வாய்ந்த கிறிஸ்தவ பாடகர் இந்துமதம் தழுவ அவரிடம் சென்ற போது "உன் மதத்தில் என்ன இல்லை என இங்கு வருகிறாய்" என வினவி இன்றளவும் அப்பாடகர் தன் கிருத்தவ மதத்திலேயே இருக்கச் செய்தவர்.
- நீதியரசர் மு.மு.இஸ்மாயில் அவர்களின் எண்ணற்ற சந்தேகங்களுக்கு அறிவு விளக்கமும் சிக்கலான தீர்ப்புகளில் உள்முகமாக உதவியவர் என அவர் வாயிலாகவே வெளிப்படுத்தியுள்ளார்.
- சுதந்திர போராட்டத்தில் தானும் கலந்து, சாத்வீகமான அவர் முறையில் மக்களை கலந்து கொள்ளச் செய்தவர்.
- ரமண பகவான் புகழ் வெளியுலகுகத் தெரிய காரணமாயிருந்த "பால் பிரண்டன்" என்ற ஐரோப்பிய பயணி ஞானம் தேடி இவரை அணுகியபோது உனக்கான குரு திருவண்ணாமலையில் இருக்கிறார் என சிஷ்யனுக்கு குருவைக்காட்டிய ஞான குரு.
- தன்னை நாடி இன்றளவும் வரும் எண்ணற்ற ஆத்மாக்களுக்கு அற்புதங்கள் நிகழ்த்திக் கொண்டிருப்பவர்.
- தர்க்க சாஸ்திரம், ஜோதிடம் மருத்துவம், வான சாஸ்திரம் போன்றவற்றில் அத்துறை யில் வல்லுவர்களோடு உரையாடும் அளவு ஆழ்ந்த ஞானமுள்ளவர்.
- எண்ணற்ற நூல்கள் /வியாக்கியானம் எழுதியவர்.
- திருப்பாவை, திருவெம்பாய், திருப்பள்ளியெழுச்சி, தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் போன்றவை இன்று எழுச்சியோடு கோவில்களில் பாடப்படுவதற்கு இவரது எழிச்சீயூட்டலே காரணமாகும்.
- டாடாவிலிருந்து பிர்லா நாட்டுக்கோட்டையார் ஆற்காடு நவாப்கள் VGP போன்ற அனைத்து மதத்தினருக்கும் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என உணர்த்தி அப்பாதையில் இவர்களை திருப்பச் செய்து இழுத்து வந்தவர்.
- இன்றளவும் நாகப்பட்டினம் மற்றும் சுற்று வட்டாரத்தில் விளையும் முதல் சாகுபடி நாகூர் ஆண்டவருக்கே அற்பணியுங்கள் என்று கூறியவர்.
- இன்று பிரதோஷம் போன்ற கூட்டங்கள் சேர்வதற்கு இவரே காரணம். 3 இலட்சம் ஆலயங்களில் இன்று ஒரு வேளை பூஜையாவது நடைபெறுவதற்கு இவரே காரணம்.
- விமான விபத்தில் 300 பேர் இறந்த போது கூட்டு பிரார்த்தனை என ஒன்றை ஏற்படுத்தி மோக்ஷ தீபம் என்ற முறையை ஏற்படுத்தியவர்.
- இப்படி சிறுவராக, இளைஞராக, மனிதராக, தனி ஒருவராக, ஞானியாக அவதரித்த அற்புத மகான்.
- உலகிலுள்ள அனைத்து மத நல்லுள்ளங்களாலும் "காஞ்சி பெரியவர்", "பெரியவா", "நடமாடும் காமாக்ஷி" என போற்றப் படுபவரின் பெயர் சந்திரசேகரேந்திரசரஸ்வதி ஸ்வாமிகள்.





ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# வாழ்க்கையின் நோக்கம் இறைவனைக் காண்பதே

93 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: "நான் இறைவனுக்காக மட்டும்தான் உழைக்கிறேன். பூவுலகத்தின் மாயை எனக்கு இல்லை. அவைகள் எல்லாவற்றின் மூலமாகவும் நான் பார்த்துவிட்டேன். நீங்கள்கூட இவ்வுலகத்திற்கு தாற்காலிமாகத்தான் வருகை தருகின்றீர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் இங்கே இருப்பது தேவையான பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் உங்கள் பாதையில் குறிக்கிடும் அனை வருக்கும் உதவுவதற் காகவும் மட்டுமேதான். எதற்காக ஒரு குறிப்பிட்ட வேடத்தில் நீங்கள் படைக்கப்பட்டு இருக்கின்றீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. எனவே இறைவன் உங்களிடம் எதை எதிர்பார்க்கின்றான் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தனிப்பட்ட ஆசைகளுக்கு இடம் கொடுக்காதீர்கள்; இறைவனின் சித்தத்தைப் பின்பற்றுவதும், அவனுக்காக வாழ்வதும், பணி செய்வதும்தான் உங்களது ஒரே விருப்பமாக இருக்க வேண்டும்."



"இன்றைக்கு நாம் இங்கிருக்கிறோம், நாளை நாம் மறைந்து விடுகிறோம். ஒரு பிரபஞ்சக் கனவில் வெறும் நிழல்கள். ஆனால் விரைந்து மறையும் இந்தப்பொய்யான காட்சிகளின் பின்னால், பரமாத்மாவின் அழிவற்ற மெய்ம்மை உள்ளது. நாம் தெய்வத்திடம் நங்கூரமிட்டு நிலைகொள்ளுவரை, இங்கே இந்தப் புவி வாழ்க்கை பயனற்றதாகவும் குழப்பம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. அதனால்தான், நான் உங்களுக்குப் பலமுறை சொல்லியிருப்பதுபோல், பரமாத்மாவின் உன்னதமான முக்கியத்துவத்தை நிரூபிப்பதற்காக நான் இங்கே இருக்கின்றேன். தோன்றி மறைகின்ற உலக லட்சியங்களின் மீதும் மனித பந்த பாசங்களின் மீதும் கவனத்தைச் செலுத்தாதீர்கள். இத்தகைய மூடப்பற்று இறைவனிடமிருந்து உங்களுடைய மனதையும் அவனிடத்திலுள்ள உங்களுடைய நித்திய ஆன்மாவையும் அகற்றி விடுகின்றது. "எப்பொழுது ஒருவன் விஷயங்களில் பற்றற்று கர்மத்தில் கருத்து வைக்காது. அகந்தையினால் உண்டாகும் சங்கல்பங்களை விட்டொழிக்கின்றானோ, அப்பொழுதுதான் அவன் யோகத்தில் நிலைபெற்று யோக புருஷன் எனப்படுகின்றான. " (பகவத் கீதை அத்.6 ஸ்லோகம்.4)

மேலும் அவர் கூறுகிறார்: "இறைவ னின் சித்தத்தினால் நீங்கள் இங்கே வந்தீர்கள். ஆனால் அவன் உங்கள் சொந்த சித்தத்தின்படி வாழும் சுதந்திரத்தை அளித்திருக்கிறான். இப்பொழுது, நீங்கள் அந்த எல்லாம் வல்ல இறைவனின் சித்தத்திற்கு கீழ்படிய தெரிந்துகொள்ளவேண்டும். இப்படி இருக்கத்தான் நான் முயற்சி செய்கின்றேன். ஒவ்வொரு காலை வேளையும், நான் என்ன செய்ய வேண்டும் என்று அவன் விரும்புகிறான் என்பதை எனக்குக் கூறும்படி நான் அவனைக் கேட்கிறேன். பிறகு என் கைகள் மற்றும் புத்தியின் மூலம் அவன் செயல்பட்டுக்கொண்டிருப்பதைக் காண் கிறேன். மேலும் அவன் விருப்பப்படியே அனைத்தும் நடக்கின்றது. எந்த மகாசக்தி மூலம் நீங்கள் வழிகாட்டுதல், சந்தோஷம், வலிமை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றைக் காண முடியுமோ அந்த மகாசக்தியைத்தான் நீங்கள் நம்ப வேண்டும். அந்த சக்திதான் உங்களுக்கு வீடுபேற்றை அளிக்கும்."

"மற்ற எந்தக் கடமையும், இறைவனுக் கான உங்கள் கடமையிலிருந்து உங்களுடைய எண்ணத்தையும் ஆசை யையும் விலக்குகிறதென்றால், அது முக்கியமானதல்ல மற்ற அனைத்தும் மாயைதான். இந்த உண்மையை கிரகித்துக் கொள்வதற்காக, என் புத்தியிலிருந்து தியானத்தின் மூலமாகவும், சிறந்த மகான்களின் சகவாசம் மூலமாகவும் எல்லா உலக பிரமைகளையும் அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. இந்தப் புரிந்து கொள்ளுதலை உங்கள் மனதில் பதியவைக்க நான் விரும்புகிறேன். இறைவன்தான் வேறெதையும் விட முக்கியமானவன் என்பதை அறியும் வரை, அவனை மகிழ்விக்க நாடுவதில் உங்கள் வாழ்க்கையை கழிக்கும் வரை நீங்கள் ஆன்மீகத்தின் வளர்ச்சி அடைந்தவரே அல்ல" என்பதை குருதேவர் நமக்கு அறிவிக்கிறார்.

அன்பிற்குரிய குருதேவர், 'இறைவனைக் காண்பது என்பது மட்டும்தான், மனிதப்பிறவி எடுத்து பூவுலகிற்கு வந்த ஒருவன் முதல் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்று போதிக்கிறார். அவர் கூறுகின்ற அந்த வார்த்தைகளில் எவவளவு மிகையான முக்கியத்துவம் உள்ளது என்பது அந்த வார்த்தைகளுள் அடங்கியுள்ளது. அது வாழ்க்கையைப் பற்றி நன்கு தெரிந்தவர்களால் மட்டுமதான் உணர முடியும் அல்லது வாழ்க்கையின் இரகசியத்தைப்பற்றி உணர்ந்தவர்களுக்கு மட்டும்தான் தெரியம். ஒரு மனிதனின் வாழ்க்கையை சீர்படுத்தி அவனை வாழவைக்கிறது இறைவன்தான். உதாரணமாக பெரிய கோவில்களில் வரிசையாக நின்று ஸ்வாமி

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

தரிசனம் செய்யும்போதும், நம்மை வரிசையாக நிறத்துகிறார். வரிசை கலையாமலிருக்க வழிகாட்டுவதற்காக ஒருவர் நின்று அறிவுரை கூறுவார். அதுபோன்று நாம் இந்த உலகமாகின்ற கோவிலுக்கு வந்திருக்கிறோம். உலகத்தை ‘கோவில்’ என்று எண்ணுபவர்களுக்கு இறைவனின் தரிசனம் நிச்சயம் உண்டு. இங்கு பல்வேறு வரிசைகள் நமக்காகக் காத்திருக்கின்றன. ஆனால் ஆயிரத்தில் ஒருவர் தான் இறைவன் காட்டும் வரிசையில் நிற்கின்றார். மற்வர்கள் வரிசையைவிட்டு விலகி கலைந்து சென்றுகொண்டிருக்கின்றனர். “இவ்வழி நல்ல வழி; அவ்வழி தீமை நிறைந்த வழி; எனவே முதலில் காட்டிய வழியே செல்லுங்கள்; இரண்டாவது வழியில் செல்லாதீர்கள்” என்று இறைவன் கூறிக்கொண்டேயிருக்கிறான். ஆனால் இறைவன் கூறிய முதல் வழியை விட்டுவிட்டு இரண்டாவது வழியில் செல்கின்றனர் மனிதர்கள். எந்த வழி நல்லவழி என்பதைக் கண் டறிய வேண்டுமென்றால், அதற்கு விவேகம் வேண்டும். விவேகம் எங்கிருந்து வருகின்றது அது இறைவனிடத் திலிருந்துதான் வருகின்றது.

உதாரணமாக ஒரு நல்ல நண்பன் நமக்கு உதவ வேண்டுமென்றால் நாம் அந்த நண்பன் கூறும் நல்லவற்றைக் கேட்க வேண்டும். நல்ல நண்பன் நல்லவற்றைத்தான் கூறுவான். நல்லவற்றைத்தான் செய்வான். அதை நாம் ஏற்றுக் கொண்டால் நமக்கு நன்மையுண்டு. அது போலவே, நாம் அனைவரும் இறைவனை ஒரு நல்ல நண்பனாகவே நினைக்க வேண்டும். அவ்வாறு நினைத்து அவனிடத்தில் சரணாகதி அடைய வேண்டும். ஒன்றுக்கொன்று சார்ந்ததுதான் மனித வாழ்க்கை, மனித வாழ்க்கை சங்கிலி போன்றது. ஆனால் மனிதனை நம்புவதற்குப் பதிலாக இறைவனை பரிபூர்ணமாக நம்பலாம்; நம்பலாம் என்று கூறுவதை விட நம்ப வேண்டும் என்பது சிறப்பு. அதன் பின்னர்தான் தெரியும் அதனுடைய மகிமை.


குருப்ரியா

உண்மையாக இறைவனிடம் சரணடைந்த ஒருவன் வேறு எதற்கும் ஆசைப்படமாட்டான். இவ்வுலகும் உலகப் பொருட்களும் அவனுக்குத் தூசிக்குசமம். அவன் எக்காரணத்தைக்கொண்டும் இறைவனுடைய வெகுமதிகளை ஆசைப்படமாட்டான். அவற்றிற்காக அவன் இறைவனை நிச்சயம் தேடமாட்டான். ஏனென்றால் அவன் வாழ்க்கையாகின்ற கொடிய நெருப்பில், அவனுடைய வாழ்நாள் முழுவதும் வெந்து நொந்து கொண்டிருப்பான். இனிமேலும் வேகவும் நோகவும் எதுவுமேயில்லை என்றாகி, அவன் மனதார, வாழ்க்கையில், ஓரமாக ஒதுங்கி நிற்பான். ‘தனக்கு எதுவும் வேண்டாம்’ என்று உறுதியான மனதுடன் நிற்பான். ஆனால் அவனுடைய குடும்பத்தைப் பார்த்தால் எல்லாம் செவ்வனே நிறைவேறிக்கொண்டிருப்பதைக் காணலாம். ஓர் ஊரில் நல்லவன் ஒருவன் இருந்தால் மழை பெய்யும் என்று கூறுவதைப் போல் ஒரு மனிதன் இறைவனுடனான சத்சங்கம் மூலம் அவன் தூய்மையாகி, அதனால் அவன் குடும்பம், இறைவனின் அருளினால் செழிப்படைய நேருகிறது. எவ்வாறெனில், குடும்பம் என்பதும் இறைவனால் ஏற்படுத்தியுள்ளதுதானே. அந்தக் குடும்பத்தில் என்னென்ன நல்ல விஷயங்கள் நடக்க வேண்டுமோ அனைத்தும் நல்லமுறையில் நடந்தேறிவிடும். குழந்தைகளின் படிப்பு திருமணம் போன்று மற்ற எல்லா நற்காரியங்களும் நடப்பதைக்காணலாம். அதற்காக அந்த இறைபக்தன் எங்கேயும் அலையத் தேவையில்லை. தேவையான எல்லாவற்றையும் நம் முன்னில் கொண்டு வந்து நிறுத்துவான் இறைவன். இறைவன்மேல் உண்மையான அன்பு இருக்கும் பக்தனிடத்தில் இறைவன் எவ்வாறு உண்மையாக இருக்கிறான் என்பதைப் பாருங்கள். ஏனென்றால் இறைபக்தனுக்கு உதவ, வேறு யாரும் இல்லை; இறைவன் மட்டும்தான் உள்ளான். அதனால்தான் அவன் வந்து உதவுகிறான். அது அவனுக்குத் தெரியும். ஏனென்றால் பக்தனின் நோக்கம் இறைவன் மட்டும்தான். எவ்வாறெனில்; பகவத்கீதை கூறுகிறது :

தத்றைகாக்ரம் மன: க்ருத்வா யதசித்தேந்த்ரிய க்ரிய:

உப விச்யாஸனே யுஞ்ஜ்யாத்யோக மாத்ம விசுத்தயே.

“புலன்கள் ஐந்தையும் அடக்கி, எந்தப்பொருளாசையோ, பிரபஞ்சத்தில் என்ன நடக்கிறது என்ற உணர்வோ, இல்லாமல் ஏகசித்தனான ஒருவன் தியானத்தில் அமருகிறான். உட்கார்ந்து கண்களை மூடுவதறுகு முன்னர் பிரபஞ்ச உணர்வு கேவலம் அஸ்தமனமாகிவிடும். ஆத்மஸாக்ஷாத் காரத்திற்கான ஆர்வம் மிகுந்த சக்தியுடனும் உற்சாகத்துடனும் அவன் மனம் வளர்ந்திருக்கும். அவன் கூறுவான் “இறைவா! இன்றைக்காவது எனக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரமுண்டாக வேண்டும்” என்று முழுமனதுடன் அவன் உலகம் சம்பந்தமான சிந்தைகளை முறியடித்து ஆஸனத்தில் உட்காருகிறான்.” (பகவத் கீதை அத்.6 ஸ்லோகம்.12)

இப்படிப்பட்ட ஒரு பக்தன் யாராக இருந்தாலும் அவனை இறைவன் வாரி அணைப்பான். இறைவனுக்கு வேண்டியது தூய்மையான, பிரேமையுடனுள்ள இதயம். இவ்வாறான இதயத்தில் இறைவன் வந்து உட்காருவான். அதன் பின்னர் தன் அன்பான பக்தனின் சிறுசிறு தவறுகளையெல்லாம் திருத்தி அவனை கண்ணாடி போன்று பரிசுத்தமாக்கி தன்னுடன் இணைப்பதற்கு இறைவன் ஆயத்தமாவான். அதற்கான வைராயக்கியமும் வளரவேண்டும். வைராக்கியத்துடனுள்ள மனம் எளிதில் சூடுபிடிக்கத் தொடங்கும். எப்படியாவது இறைவனைக் கண்டேயாக வேண்டும் என்ற மனப்பாங்கு உண்டாகும். உலக வாழ்க்கையை உணர்ந்த ஒரு பக்தன் தானாகவே உன்னதமான இறை நிலையை அடையத் தயாராகிறான். அவனுக்கு இறைவன் முழுமையாக உதவுவான். அது அவன் தன் வாழ்க்கையின் நோக்கம் என்னவென்று கண்டு பிடித்து அதில் அல்லது அந்தச் செயலில் (தியானத்தில்) விடாப்பிடியாக ஈடுபடுவதால் இறைவனில் அவன் மனம் நங்கூரமிடத் தொங்குகிறது. பின்னர் அவனுடைய நோக்கத்தை இறைவன் நிறைவேற்றி வைக்கிறான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909



# இழந்த செல்வங்கள் பொருட்களை மீட்டுத்தரும்

# அனந்த பத்மநாப விரதம்

சந்திரனை ஆதாரமாக கொண்ட பஞ்சாங்கத் தின்படி, சுக்லபட்ச சதுர்தசியில் நிகழும் விரதங்களில் மிக முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுவது அனந்த சதுர்தசி விரதமாகும்.

பாத்ரபத புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்தசி திதியில் சம்பவிக்கும் இதை அனந்த பத்மநாப சுவாமி விரதம் எனவும் நம் பூலோக இச்சைகளை முழுவதுமாக நிறைவேற்றி வைப்பதால் 'காம்யா விரதம்' எனவும் அழைக்கப்படுகிறது.


அனந்த விரதம் அளவிட முடியாத செல்வச் செழிப்புக்களை அளிக்கக் கூடியது. ஸ்ரீமந் நாராயணன் ஆதிசேஷன் மீது, அனந்த பத்மநாபனாக சயனித்தவாறு இந்நாளில் தோன்றியதாக ஐதீகம்.

ஒவ்வொரு ஆண்டும் வரும் ஆவணி மாத சுக்லபட்ச சதுர்த்தசியன்று சுமங்கலிப் பெண்கள், விரதம் இருந்து அனந்த பத்மநாப சுவாமி



படத்தை கிழக்கு பார்த்து வைத்து மலர் அலங்காரம் செய்ய வேண்டும். ஆவணி அல்லது புரட்டாசி மாதத்தில், விநாயகசதுர்த்திக்கு அடுத்து வரும் சதுர்த்தசி திதியில் கடைபிடிக்கப்படுகிறது.

இழந்த செல்வம், பொருட்கள் மற்றும் அனைத் தையும் மீட்டுத்தரும் அறிய விரதம் ஸ்ரீ அனந்த விரதம்.



எஸ்.ரகுராமன்

இந்த பூஜையை கணவன், மனைவி இரு வரும் சேர்ந்து செய்வது சிறப்பு. இயலாவிட்டால், பெண்கள் செய்யலாம். பொதுவாக, இது பெண்களுக்கான விரதமாகவே கூறப்பட்டிருக் கிறது. மிகுந்த ஆசாரத்துடன், நியமங்களை வழுவாது கடைப்பிடித்துச் செய்ய வேண்டிய பூஜையாகும். பூஜை முடியும் வரை உபவாசம் இருப்பது கட்டாயம்.

பாத்ரபத மாத வளர்பிறை சதுர்த்தி அன்று இந்த விரதத்தை செய்ய வேண்டும். 14 முடிகள் போட்ட சிவப்பு வண்ணக் கயிற்றினை தயார் செய்து நதியில் நீராடி சிவப்பு வஸ்திரம் தரித்து கலசத்தை சிவப்பு வண்ணத்தினால் அலங்கரித்து கலசத்தில் நீரை நிரப்பிக் கொள்ள வேண்டும். ஒரு சிவப்பு வஸ்த்ரத்தில் தாமரைப்பூவை வரைந்து அதன்மேல் கலசத்தை வைக்க வேண்டும்.

சில தர்ப்பைகளை எடுத்து பாம்பு போல் பின்னி கலசத்தின் மீது வைக்க வேண்டும். இதன் மேல் மஞ்சள் பூசிய தேங்காயை ஸ்ரீ அனந்தசயனனாக பாவித்து பூஜையை செய்ய வேண்டும். அப்புண்ணிய கலசத்தில் ஸ்ரீ மஹா விஷ்ணு நான்கு கரங்களில் சங்கம், பத்மம், சுதர்சனம், கதை முதலியவைகளை கொண்டு வீற்றிருப்பதாக த்யானித்து, "ஓம் நமோ பகவதே" என்கிற மந்திரத்தால் தர்ப்ப க்ரந்தியை பூஜிக்க வேண்டும்.

புதிய சிகப்பு பட்டு நூலை கொண்டு கலசத்தின் மீது வைத்து புருஷ ஸுக்தத்தினால் 16 விதமாக உபசரித்து "அதோ தேவேதி" என்கிற மந்திரத்தினால் பூஜிக்க வேண்டும்.

"ஸம்ஸாரேதி" என்கிற மந்திரத்தை சொல்லி புதிய அனந்த சூத்திரத்தை வலது புஜத்தில் கட்டி கொண்டு "நமஸ்தே வாஸுதேவா" என்கிற மந்திரத்தை சொல்லி பழைய நூலை விஸர்ஜனம் செய்ய வேண்டும்.

ஷோடசோபசார பூஜைகளும், அங்க பூஜையும் செய்து துதிக்க வேண்டும். அதன் பின், நோன்புச்சரடை ஸ்வாமியின் பாதத்தில் வைத்துப் பூஜிக்க வேண்டும். பக்தியுடன் நிவேதனங்கள், பழங்கள், தாம்பூலம் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மந்திர புஷ்பாஞ்சலி முடிந்த பிறகு,

அனந்தாய நமஸ்துப்யம் ஸஹஸ்ர சிரஸே நம:|
நமோஸ்து பத்மநாபாய நாகாநாம் பதயே நம:||

என்ற மந்திரத்தைக் கூறி, சரட்டை நமஸ்கரிக்கவும். பிறகு, மந்திரங்களைக் கூறி, நோன்புச்சரடை பக்தியுடன் அணிந்து, பிரார்த் தனை செய்யவும்.



நமஸ் ஸர்வஹிதானந்த ஜகதானந்தகாரக |
ஜீர்ணதோரம் வாஸூதேவ விஸ்ருஜாமி த்வதாஜ்ஞயா ||

"ததாச விஷ்ணுர் பகவான்" என்கிற மந்திரத்தை சொல்லி நெய்யுடன் கூடிய கோதுமையையும், பழங்களையும், ஆபூபம் (அப்பம்), தாம்பூலம், தக்ஷிணை (கலசத்துடன்) இவைகளை ஓர் வேதம் அறிந்த அந்தணர்க்கு தனது தகுதிக்கு ஏற்றவாறு தானம் செய்ய வேண்டும். இவ்வாறு 14 ஆண்டுகள் 14 கலசங்களை தானம் செய் தால் எல்லா மனோபீஷ்டங்களும், நான்கு வித புருஷார்த்தங்களும், வளமும், நலமும் பெற்று நீடூழி வாழ்வர்.

இந்நாளில் பரந்தாமனிடமிருந்து வெளிப்படும் சக்தி அலைகள் இவ்வுலகம் முழுவதும் பரவியி


ஆன்மிகமலர் மெயில் புக்

ருக்கும். ஆகையால் அந்நாளில் விரதமிருந்து அனந்தனை வழிபட்டால் அந்தச் சூட்சுமச் சக்தி அலைகள் நம்மில் இரண்டறக் கலக்கும் என்பது நம்பிக்கை.

சூதில் தோற்ற பாண்டவர்கள் 12 ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து பலவித இன்னல்களை அனுபவித்து கொண்டு இருக்கும் பொழுது, மேலும் அவர்களுக்கு இன்னல்களை விளைவிக்க நினைத்து துரியோதனன் துர்வாச மகரிஷியை அனுப்பி வைத்தான்.

கோப முனியான துர்வாசரிடம் இருந்து அவர்களை காக்கும் பொருட்டு கிருஷ்ணர் அவ்விடம் வந்தார்.

அப்பொழுது தருமர், கிருஷ்ண பரமாத்மாவிடம் நீ அருகில் இருக்கும் பொழுது இவ்வாறு இன்னல்களை அனுபவித்து கொண்டிருக்கிறோம், தாங்களும் எங்களை கைவிட்டால் வேறு யார் எங்களை காப்பாற்றுவார் என வேண்ட, ஸ்ரீ கிருஷ்ணர், "நான் இந்த உலகம் முழுவதும் வ்யாபித்து இருக்கும் அனந்தன்! மும்மூர்த்திகள், 14 உலகங்கள், சூரிய, சந்திரர்கள், நக்ஷத்திர மண்டலம், தேவர்கள், கோள்கள், இரவு, பகல், நாள், வாரம், மாதம், வருடம், நதிகள், மலைகள், அணுக்கள், எல்லாமும் நானே! இவ்வாறு அனந்தனாக பாவித்து என்னை பூஜித்தால் உங்கள் இன்னல் தீர்ந்து வேண்டுவன கிடைக்கும். அதன்படி பாண்டவர்கள் ஸ்ரீ அனந்த விரதம் இருந்து கீர்த்தி பெற்றனர்.

க்ருத யுகத்தில் வசிஷ்ட கோத்திரத்தை சேர்ந்த சுமந்தன் கவுதமி தம்பதியருக்கு புதல்வி யாக சுசீலை பிறந்தாள். கௌடிண்யர் என்ற வேதம் பயின்ற அந்தணரோடு திருமணம் நடந்தது.

கௌடிண்யர் மிக அற்ப ஆயுள் உள்ளவனாக இருந்தான். சுசீலாவின் மாற்றான் தாயின் கொடுமையில் இருந்து வீட்டை விட்டு வெளியேறி பல இன்னல்களை அனுபவித்து இந்த அனந்த விரதத்தை மேற்கொண்டு இப்புண்ணிய வ்ரதத்தினால் நீண்ட ஆயுளையும், இழந்த அனைத்தையும் பெற்று முக்தி அடைந்தாள். இப்புண்ணிய சரிதம் ஸ்ரீ குரு சரித்திரம் என்னும் நூலில் மிக விரிவாக எடுத்துரைக்கிறது.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

# அத்தி விருட்ச சஹஸ்ர ருத்ராக்ஷ லிங்க கும்பாபிஷேக விழா

காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலையில் உக்கம் பெரும்பாக்கம் கிராமத்திற்கு தெற்காக கூழமந்தல் ஏரிக்கையில் வேறு எங்கும் காணக்கிடைக்காத 27 நட்சத்திர அதிதேவதைகளின் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் அசுவனி முதல் ரேவதி விரையிலான 27 நட்சத்திரங்களின் அதிதேவதைகளையும், அவற்றிக்குறிய 27 விருட்சங்களை (மரங்கள்) ஒரு சேர அமைந்த அற்புத திருக்கோயிலாக திகழ்ந்துவருகிறது. இதை தவிர இராகு கேது, சனீஸ்வரர் என தனித்தனி சன்னதிகள் அமைந்துள்ளது.

அனைத்து தேவர்களுக்கும்; நடுநாயகனாக முழு முதற்கடவுளான அருள்மிகு நட்சத்திர விருட்ச விநாயகர் எழுந்தருளி அருள்பாளித்து வருகிறார். மேலும் இத்திருக்கோயிலில் குரு பெயர்ச்சி, இராகு கேது பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, ஒவ்வொரு மாதத்தில் வரும் சிறப்பு நட்சத்திரத்திற்கு சிறப்பு பூஜை, காணும் பொங்கல், 108 கோபூஜை என பல்வேறு விஷேசங்கள் நடைபெற்று வருகிறது.

தெய்வத்தின் சக்தியினை ஈர்த்து மனிதனுக்கு கொடுக்கும் சக்தி ருத்ராக்ஷத்திற்கு உண்டு. பல்வேறு முகம் கொண்ட ருத்ராக்ஷம் பல்வேறு தெய்வ அம்சங்களை கொண்டது. பல்வேறு மருத்துவ பயன் களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு முகம் கொண்ட ருத்ராக்ஷங்கள் உள்ளது. அதே போல் அத்தி மரத்தால் செய்யப்பட்ட தெய்வ உருவத்திற்கு ஆதீத சக்தி உண்டு. அத்தி மரத்தை தவிர வேறு மரத்தினால் தெய்வ சிலைகள் அமைக்கப் படுவதில்லை. அத்தி மரத்தினால் செய்யப்பட்ட தெய்வத்தின் முன் நாம் சொல்லும் ஒவ்வொரு மந்திரம் முழுமையாக கிரகித்து முழு பலனையும் திரும்ப கொடுக்கும் சக்தி அத்தி விருட்சத்திற்கு (மரத்திற்கு) உண்டு.



இவ்வாறாக தெய்வ சக்தி பொருந்திய அத்தி விருட்சத்தினால் உறுவாக்கப்பட்ட அத்தி விருட்ச லிங்கத்திற்கு 27 நட்சத்திரங்களுக்கான பல முகங்களை கொண்ட பல ஆயிரம் ருத்ராக்ஷங்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட அத்தி விருட்ச சஹஸ்ர ருத்ராக்ஷ லிங்கத்தினை இத்திருக்கோயிலுக்கு காணிக்கையாக ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கர விஜேந்திர சரஸ்வதி சுவாமிகள் தம் பொற்கரங்களால் வழங்கியுள்ளார். பிரதிஷ்டை செய்வதற்காக திருக்கோயில்கள் அமைக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், அத்தி விருட்ச சஹஸ்ர ருத்ராக்ஷ லிங்கம் மற்றும் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆகியோர்களுக்கான மகா கும்பாபிஷேக விழா வரும் 4.12.2020 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 9 மணிக்கு மேல் நடைபெறுகிறது. பக்தர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு அத்தி விருட்ச சஹஸ்ர ருத்ராக்ஷ லிங்கம் மற்றும் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசிவசுப்பிரமணியர் திருவருளைப்பெற அன்புடன் அழைக்கிறோம்.

– திரு.வி.சுவாமிநாதன்,

தொடர்புக்கு:

9445120996.









ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# இயற்கையும் கடவுளும் வேறு வேறல்ல

கவிதை என்பது என்ன? அது ஒரு கவிஞனின் உள்ளத்து வரைபடம். அந்த கலை சில வரைகோணங்களைத் தருகிறது. அதைக்கொண்டு ஒரு உருவத்தை சமைத்து விடலாம். இந்த மாதிரி கவிதை ஒரு மனிதனையும் ஏற்படுத்தி விடுகிறது. அவன் தான் பிறந்த உலகத்தையும் இந்த வண்ணமே பார்த்து விடுகிறான்.

❖❖❖

கடவுளானாலும் இயற்கையானாலும் இவைகளை கண்களால் பார்க்கும்படியாக கவிதை தன்னிடத்தில் உள்ள திறமையால் இவைகளுக்கு ஒரு வடிவ அமைப்பை கொடுத்து விடுகிறது. அதனால் அது மனித உள்ளத்தில் நின்று விடுகிறது. இந்த வண்ணம் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் கவிஞர்களாக இருந்து விடுகிறார்கள்.

❖❖❖

பைரன் என்பவர் ஒரு ஆங்கில கவிஞர். அவருடன் சேர்ந்து ஓடி கடவுளைத் தேடும் முயற்சியில் நானும் திடீரென்று ஒரு கவிஞனாகி விட்டேன்.

❖❖❖

நீ ஒரு கவிஞனாக வேண்டுமா? எந்த மொழியில் ஆக வேண்டும் என்று நினைக்கிறாய்? எந்த மொழியானாலும் அம்மொழியை முதலில் ஊன்றி கவனி. அதன்பின் அதில் தெரிகின்ற உள்வடிவத்தை பார்த்து அதன் வழியே உனது நேர்த்தியான சிந்தனையின் தன்மையை கூடவே கடவுள், உலகம் இவைகளையும் கவனித்து விடலாம்.

❖❖❖

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கருத்தே கவிதை. இது எப்படிப்பட்டது தெரியுமா? காலணி என்ற பூட்சுகளின் அடிப்புறத்தில் அதைக் காப்பாற்றுகின்ற உள் உடம்பைப் போன்று வெளிப்பக்கத்தில் ஒரு மிருதுவான தோல் வேறு ஒரு தோலிலே அதே உருவில் செய்து ஒட்டி வைக்கப்பட்டிருக்கும். இதுபோல சொல்ல வந்த நமது கவிதையின் சுருக்கத்தை நம் உள்ளே இருக்கின்ற ஆன்மா என்ற சிறிய உடம்பு தாங்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

❖❖❖

மிருதுவான உள் உடம்பு போன்ற காலணியின் வெளித் தோல் கள் இல்லாமல் காலணிகள் வெகுநாட்களுக்கு உழைப்பதில்லை. இந்த வண்ணம் ஒரு கவிதையும், ஒரு கவிஞனும் தனது உள்ளுடம்பு என்ற ஆன்மாவை வைத்து கொண்டே மேலான சிந்தனை உலகினில் நடக்கிறார்கள்.

❖❖❖

தான் கண்களால் பார்த்தபடியும் பார்த்ததை கவனித்துமே உலகம் என்னும் மிகப்பெரிய வெட்டவெளி வானில் பலவிதமான கண்ணுக்கு ரம்மியமான காட்சிகளையும் புதிய வரைபடங்களையும் பலப்பலவாக ஒரு மனிதன் படைத்து எழுதுகிறான். இதுபோல கவிஞர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? தங்களுடைய உள்ள நினைவு என்ற பெரிய வானில் எதிர்காலக் காட்சிகளையும் படங்களையும் அதன் உள் அர்த்தங்களையும் உள் உணர்வுகளையும் நாம் உணரும்படியாகக் கண்டு வரைந்து விடுகிறார்கள்.

❖❖❖

ஒரு புத்தியுள்ள மனிதன் முதலில் சிந்திக்கிறான், பிறகு அதையே வாழ வைக்கிறான். பின்பு அதற்கு வடிவம் தருகிறான். அதன்பின்பு அதையே கவிதையாக வடிக்கிறான். இதுதான் அவனுடைய அச்சாணி போன்ற முதற்தரமான வேலை.

❖❖❖

கவிதை என்பது இயற்கையையும், கடவுளையும் வெளிக் கொணர்ந்து காட்டி விடுகிறது. இயற்கையும் கடவுளும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்றே. அதையே கவிதை என்று சொல்லுகிறார்கள்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ‘ஆகாச காமினி’ மந்திரம்

நமக்கு தெரியாததை அறிந்து கொள்ளும் ஆர்வம் இயற்கையாக எல்லோருக்கும் உண்டு. தென் அமெரிக்கா நாட்டில் மறைந்து போன மாயன்களின் அதிசய ஆற்றல்களை அறிந்து கொள்வதற்கே ரேஷன் கடையில், மண்ணெண்ணெய் வாங்குவதற்கு வரிசையில் நிற்பது போல நமது ஜனங்கள் நிற்கிறார்கள் என்றால் கண்ணுக்கும், கருத்துக்கும் வெகுதூரத்தில் இருக்கின்ற அண்டங்கள் மற்றும் அமானுஷ்ய இரகசியங்களை தெரிந்துகொள்ளவே வேண்டாம் என்று எந்த சோம்பேறியும் சொல்லமாட்டான். தள்ளாடி தள்ளாடி மரணப்படுக்கையில் கிடக்கும் கிழவன் கூட இப்படிப்பட்ட செய்தி கிடைக்கிறது என்றால் எழுந்து திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள்வான். அவ்வளவு ஆர்வம் மனித சமூகத்தை ஆட்டிப்படைத்து கொண் டிருக்கிறது.

பூமியில் மட்டும் தான் மனிதர்கள் வாழ்கிறார்களா? வேற்று கிரக மனிதர்கள் பூமிக்கு வந்து போகிறார்களா? பூமியில் அறியப்படாத இரகசியங்கள் வேறு எதாவது உண்டா? கூடு விட்டு கூடு பாய்வது என்றால் என்ன? அமானுஷ்யமான உருவங்களை எல்லோரும் பார்க்க முடியவில்லையே ஏன்? பார்க்க என்ன செய்ய வேண்டும்? இப்படி நிறைய கேள்விகள் நம்மிடம் உண்டு. இந்த கேள்விகள் பலவற்றிற்கு அறிவியல் கூறுகிற பதில்கள் நமக்கு தெரியும். நமது பண்டையகால ரிஷிகள் வேதங்களிலும், வேறு பல நூல்களிலும் வான சாஸ்திரம், கிரகங்களின் தன்மைகள், ஆகாயத்தில் பறக்கும் வித்தை என்பது போன்று பல அறிய இரகசியங்களை கூறி வைத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லி சென்றிருக்கின்ற இரகசியங்கள் என்ன? அத்தகைய இரகசியங்களை அவர்களால் மட்டும் தான் காண முடியுமா? கண்டு கூற முடியுமா? இன்று இருக்கும் ஆன்மீக பெரியவர்கள் எவராலும் அப்படி கூற இயலாதா? என்பது போன்ற பல கேள்விகளை குருஜியிடம் நாங்கள் அவ்வப்போது கேட்பதுண்டு. அதற்கு அவர் நேராகவும், மறைமுகமாகவும் பதிலைச் சொல்வார். அந்த பதில்களில் சிலவற்றை உங்களோடு அவ்வப்போது பகிர்ந்து கொள்வதற்கு விரும்புகிறோம். அந்த வகையில் குருஜியிடம் பூமியை தவிர மற்ற இடங்களில் மனிதர்கள் இருக்கிறார்களா? என்ற கேள்வியை கேட்டோம் அதற்கு அவர்




புராணங்களை பற்றி நமக்கு மிக தவறான அபிப்ராயங்கள் இருக்கிறது. புராணங்கள் என்றாலே அதில் மிகைபடுத்தி கூறப்பட்ட விஷயங்கள் இருக்கும். பொய்களும், அதீதமான கற்பனைகளும் மலிந்து கிடக்கும் எதை நம்பினாலும் நம்பலாம். **புராணங்களை நம்ப கூடாது என்று நினைக்கிறோம். இது நமது இயற்கையான சுபாவம் அல்ல. வெள்ளைக்காரன் நமது மண்டையை உடைத்து, அதற்குள் திணித்து வைத்த சுபாவமாகும்.** முதலில் நமது அறிவு வளர வேண்டுமென்றால் இது இப்படிதான் இருக்க வேண்டும் என்று பொத்தாம் பொதுவாக முடிவு கட்டிவிடும் மனோ பாவத்தை மாற்ற வேண்டும். புராணங்களிலும் உண்மைகள் இருக்கலாமோ, அவைகளிலும் நம்ப தகுந்த காரியங்கள் எதாவது மறைந்து கிடக்குமோ? என்ற ஆய்வு மனப்பான்மையை வளர்த்து கொண்டாவது அவைகளை படிக்க வேண்டும்.

பல புராணங்களில் அசுரர்களும், தேவர்களும் அசாத்தியமான வீரம் படைத்த அரச குமாரர்களும் பல உலகங்களுக்கு சென்று வந்ததாகவும், அவைகளை வென்று வந்ததாகவும் கருத்துக்கள் நிறையவே இருக்கிறது. பொய்யான ஒரு விஷயத்தை கண்ணை மூடிக் கொண்டு திரும்ப திரும்ப சொல்வது நமது முன்னோர்களின் இயல்பு அல்ல. ஒரு சதவிகிதம் கூட உண்மை இல்லாத விஷயத்தை அவர்கள் பேச மாட்டார்கள். உதாரணத்திற்கு சந்திரனை எடுத்து கொள்வோம். சந்திரன் என்றாலே குளிர்ச்சி, சிலேத்துமம், தண்ணீர் என்று தான் நமது பெரியவர்கள் கூறினார்கள். ஆனால், விஞ்ஞானம் என்ன சொன்னது ஒட்டுமொத்த நிலாவையே பிடித்து வந்து ஆலையில் போட்டு அரைத்து பிழிந்து எடுத்தாலும், ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது என்று தான் ஆரம்பத்தில் வாதிட்டார்கள். கற்பூரத்தை அடித்து சத்தியம் செய்தார்கள். இன்று நிலைமை மாறிவிட்டது. சந்திரனில் இருக்கும் ஒரு சிறு நீர் பிடிப்பு பகுதியை பூமிக்கு கொண்டுவந்தால் பூமியில் முக்கால்வாசிபேர் சில வருடங்கள் தாகம் இல்லாமல் இருப்பார்கள் என்ற அளவிற்கு பேச வந்துவிட்டார்கள். எனவே விஞ்ஞானம் கூறுவது இறுதியான உறுதியான முடிவுகள் அல்ல. காலந்தோறும் அவைகள் மாறிக்கொண்டே வருவதை காணலாம். அதே போலதான் வேறு



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

உலகங்களை பற்றிய நிகழ்வுகளும்.

நமது ரிஷிகளில் பலர் “ஆகாச காமினி” என்ற மந்திர சித்தி பெற்றவர்கள். இந்த மந்திர சித்தி என்ன பலனை தருமென்றால் நமது உடம்பு ஒரு இடத்தில் பத்திரமாக இருக்கும் போதே, நமது உயிர் உடம்போடு சிறிய தொடர்பை மட்டும்வைத்துக்கொண்டு எங்கு வேண்டுமென்றால் சென்று வரலாம் என்பதாகும். இதன் சக்தி யால் பூமியை மட்டுமல்ல. பூமிக்கு அப்பாலும் சென்று பல அரிய காட்சிகளை, இரகசியங்களை தெரிந்து வரலாம். அந்த வகையில் எந்தெந்த கிரகங்களில் உயிர்கள் இருக்கிறது. எதில் இல்லை என்பதை தெளிவாகவும், உறுதியாகவும் அறிந்து கொள்ளலாம். இதுவரையில் நமது ஞானிகள் பூமியை தவிர, பதினாலு உலகங்கள் உயிர்கள் வாழக்கூடிய தகுதியில் இருக்கிறது என்று கண்டறிந்து இருக்கிறார்கள். அதல, விதல, சுதல, பாதாள, என்பது தொடங்கி பூ, புவ, சுவ என்று அதன் பட்டியல்கள் செல்கிறது இதை மிக சுலபமாக மேலோகம், ஏழு கீழ் லோகம், ஏழு என்று நாம் பிரிக்கலாம்.

இஸ்லாமிய இறை வேதமான குரானில் கூட, ஏழு வானங்கள் இருப்பதாக சொல்லபட்டிருப்பது ஏழு உலகங்களை தான் குறிக்குமென்று நான் நம்புகிறேன். கிறிஸ்துவ விவிலியத்திலும், வானவர்கள் மேலே இருந்து இறங்கி வந்தார்கள் என்று கூறுவதையும் இந்த வகைகளிலே



கருதுகிறேன். எனவே பூமியை தவிர வேறு பல கிரகங்களில் உயிர்வாழ்க்கை இருக்கிறது வேண்டுமானால், நமது சூரிய குடும்பத்திலுள்ள மற்ற கிரகங்களில் தற்போதைய நிலையில் உயிர் வாழ்க்கை எதுவும் இல்லை என்று கூறலாம். ஆனால், மற்ற சூரிய குடும்பத்தில் நிலைமை இப்படி இல்லை. அங்கே உயிர்கள் உண்டு என்று பதில் சொன்னார். அவரிடம் செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் வாழ்ந்ததா, அதைப் பற்றி நமது முன்னோர்கள் எதாவது கூறியிருக்கிறார்களா? நீங்கள் சொல்லும் ஆகாச காமினி மந்திரத்தால் உங்களுக்கு சொந்த அனுபவங்கள் ஏதாவது உண்டா? என்று கேட்டோம்.

நமது பூமியை போலவே செவ்வாயில் உயிர் வாழ்க்கை இருந்திருக்கிறது. கந்த புராணத்தில் சூரபத்மன் செவ்வாய் கிரகத்தில் தான் தேவர்களை அடைத்து வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் புராணத்தில் சொல்லப்படும் சிறைச்சாலை பற்றிய வர்ணனைகளும் தற்போது தொழில்நுட்ப உதவியால் நாம் பெற்றிருக்கும் செவ்வாயை பற்றிய புகைப்படங்களும் இதை நமக்கு சொல்லாமல் சொல்லுகின்றன. இன்று பூமியை நாம் இயற்கையை சிதைத்து வாழ்ந்து கொண்டிருப்பது போல, அன்று செவ்வாய் வாசிகள், செவ்வாயை கொன்றிருக்கிறார்கள். குருஷேத்ராவில் புதைபொருளாக கண்டெடுக்கப்படும் எலும்புகளில் அணுக்கதிர் தாக்கம் இருப்பதை விஞ்ஞான ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அணுவாற்றலை அக்கால மனிதர்களே அறிந்து வைத்திருக்கின்ற போது, செவ்வாயில் வாழ்ந்தவர்கள் அணுவை விட சக்தி வாய்ந்த வேறு எதாவது ஒரு வகை கனிமத்தை கண்டுபிடித்து விபரீதமாக விளையாடி தாங்கள் வாழும் பகுதியை முற்றிலுமாக கொலை செய்திருக்கலாம். ஆனாலும், செவ்வாய் முழுமையாக செத்துவிடவில்லை. அதன் ஒரு பகுதியில் நீரும், காற்றும் இன்னும் உயிர் துடிப் போடு இருக்கிறது. சில உயிர்களும் கூட அங் கிருக்கலாம். இன்னும் சிறிது காலத்தில் மக்கள் நம்பும் படியான ஆதாரங்கள் கண்டிப்பாக கிடைக் கும். அப்போது நான் சொல்வது உண்மை என்று தெரியவரும். என்று பதில் சொன்னார். இந்த பதிலில் அவரது ஆகாச காமினி மந்திர அனுபவ மும் கலந்திருப்பதை எங்களால் உணர முடிந்தது.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்

**போன்: 09442426434**



# ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி சுவாமிகள்

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 2



மாதவன், அம்பா பவானி என்னும் சிவ பக்த தம்பதிகளுக்கு. தத்தாத்ரேயரின் இரண் டாவது கலியுக அவதாரமாக பிறந்தவர் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள். பிறந்த குழந்தைஅழாமல் முதலில் ஓம்காரத்தை உச்சரித்து அனைவரையும் ஆச்சர்யப்படுத்தியது. இவரது ஜாதகத்தை கணித்த ஜோதிடர்கள் இக்குழந்தை ஒரு தெய்வீகப்பிறவி என்றும், அனைவர்க்கும் குருவாக இருந்து நமது ஹிந்து சனாதன தர்மத்தை காப்பனாவென்றும், அஷ்டமாசித்திகளும் இவனது வாயிலில் குற்றேவல்புரிய காத்திருக்கும் என்றனர். பெற்றோர்கள் அக்குழந்தைக்கு நரஹரி என்று பெயர் சூட்டினார்.

நமது குரு பரம்பரையில் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதிக்கு சிறப்பான இடம் உண்டு. இவரின் பிறப்பு, அவதார நோக்கம், அவரின் மஹிமை, தீர்த்த யாத்திரை, க்ஷேத்ர மஹிமை பற்றி ஸ்ரீ குருசரித்ரம் மிக மிக விரிவாக பேசுகிறது.

இவர் நரசிம்ம மூர்த்தியின் அம்சமாக அம்சமாக கருதப்படுகிறார். அதனால் தான் அவருக்கு மிகவும் ப்ரீதியான அத்தி மரத்தினடியில் ஸ்ரீ நரசிம்ம ஸரஸ்வதி நித்ய வாசம் புரிந்தார். இவரை வணங்குவதால் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியின் பரி பூரண க்ருபா கடாக்ஷம் நமக்கு கிடைக்கும்.

கணேசோ வாக்னினா யுக்தோ விஷ்ணுனா
ச ஸமன்வித
வர்ணத்வயாத்மகோ மந்த்ர சதுர்வர்க பலப்ரதா

குரு என்னும் இரண்டெழுத்து கணேசர், அக்னி மற்றும் விஷ்ணு ஆகியோரின் பெயர்களை உள்ளடக்கியது.

குரு: பிதா குரு: மாதா குருதேவோ பர: சிவா
சிவருஷ்டே குருஸ்த்ராதா குரோருஷ்டே ந கச் சன !!

குருவே அன்னை, தந்தை, அந்த சிவபெருமானு மாவார். சிவன் கோபம் கொண்டால் குரு காப்பாற்றுவார். ஆயின் குரு கோபம் கொண்டால் அந்த மும்மூர்த்திகளாலே காப்பாற்ற முடியாது.

### குரு பரம்பரை

ஸ்ரீ சதாசிவன் ஸ்ரீமன் நாராயணன் சதுர் முக ப்ரஹ்மா வசிஷ்டர் சக்தி பராசரர் வ்யாஸர் சுக ப்ரஹ்மம் கௌட பாதர் கோவிந்த பகவத் பாதர் ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யர் ஸ்ரீ விஸ்வரூபாச்சார்யர் ஸ்ரீ ஞானபோதகிரி ஸ்ரீ சிம்மகிரி ஸ்ரீ ஈஸ்வர தீர்த்தர் ஸ்ரீ நரசிம்ம தீர்த்தர் ஸ்ரீ வித்யா தீர்த்தர் ஸ்ரீ சிவ தீர்த்தர் ஸ்ரீ பாரதி தீர்த்தர் ஸ்ரீ மலியானந்தர் ஸ்ரீ தேவதீர்த்தர் ஸ்ரீ சரஸ்வதி வ்ருந்தர் ஸ்ரீ யாதவேந்திர சரஸ்வதி ஸ்ரீ கிருஷ்ண சரஸ்வதி ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி

நரஹரிக்கு ப்ரஹ்மோபதேசம் செய்விக்க அவனின் பெற்றோர் முடிவு செய்தனர். அனைவரும் இப்புனித வைபவத்திற்கு அழைக்கப்பட்டனர். சரியாக பேச்சு வராத இக்குழந்தை எவ்வாறு காயத்ரி மந்திரம் ஜெபிக்கும் என்று அனைவரும் ஒருவருக்கொருவர் பேசினர். அம்பா பவானி மாத்ரு போஜனம் செய்வித்தபின் பல புண்ணிய மந்திரங்கள் சாஸ்திரோதமாக ஓதப்பட்டு யக்னோபவீதம் என்னும் பூணூல் நரஹரியின் மார்பில் அணிவிக்கப்பட்டது. குரு முகமாக உபதேசிக்கப்பட்ட காயத்ரி மந்திரத்தை நரஹரி மனதில் உச்சரித்தான்.

அதன்படி முதல் பிக்ஷா வந்தனத்திற்கு தாயிடம் சென்றவுடன், முதல் பிக்ஷையை இட்டு அவனிடம் ரிக்வேதம் படிக்குமாறு கூற, உடனே நரஹரி 'அக்னிமீளே புரோஹிதம்' என்று ரிக் வேதத்தின் முதல் வாக்கியத்தை கூறினான். இரண்டாவது பிக்ஷையிட்டவுடன் யஜுர் வேதத்தின் முதல் வாக்கியமான ' ஈஷேத்துவா /இஷேத்வா' எனவும், மூன்றாவது பிக்ஷை அளித்ததும், சாம வேதத்தின் முதல் வாக்கியமான 'அக்னி ஆயாஹி ' என்றவுடன் சுற்றி இருந்த அனைவருக்கும் வியப்பாகவும் அதே சமயம் ஆச்சர்யமாகவும் இருந்தது. சரியாக பேச்சு வராத ஊமை குழந்தை இப்படி அக்ஷர சுத்தமாக வேதும் ஓதுகிறது என்றால் நிச்சயம் இக்குழந்தை ஓர் தெய்வீக பிறவியாக மட்டும்தான் இருக்க முடியும் என்று நினைத்தனர்.

நரஹரி தன் தாயிடம் அம்மா நான் துறவறம் கொள்ளும் நேரம் வந்து விட்டது. என்னை தயவு செய்து சன்யாச ஆஸ்ரமம் ஏற்றுக்கொள்ள அனுமதி அளிக்கும்படி வேண்டினான். அம்மா சென்ற ஜென்மத்தில் தங்கள் செய்த சிவ பூஜையின் விளைவாகத்தான் நான் இன்று உங்களின் மகனாக பிறந்தேன். உங்களுக்கு இன்னும் குழந்தைகள் பிறந்து மிகவும் கீர்த்தியுடன் விளங்குவார்கள். அம்பா பவானி , மகனே எனக்கு அடுத்த குழந்தை பிறக்கும் வரை நீ எங்கு எங்களுடன் இருக்க வேண்டும் என்று கூற நரஹரியும் அதற்கு சம்மதம் தெரிவித்தான். அம்பா பவானி இரட்டை மகவை ஈன்றதும், நரஹரி



எஸ்.ரகுராமன்

சன்யாச ஆஸ்ரமம் மேற்கொண்டு அன்னையிடம் மற்றும் சுற்றி இருந்த அனைவரிடமும் விடை பெற்று, கவலைதோய்ந்த அன்னையிடம், அம்மா வருந்தாதே அனைத்தும் ஈஸ்வர சங்கல்பத்தினால் மட்டுமே நிகழ்கிறது. ஒருவன் சன்யாச ஆஸ்ரமம் மேற்கொள்ளும் பொழுது அவனுடைய 21 தலைமுறைகளும் மோக்ஷம் அடைகின்றன. நான் இப்பொழுது பத்ரிகாஸ்ரமம் சென்று நர நாராயணர்களை தரிசித்து புண்ணிய யாத்திரை மேற்கொண்டு 30 வருடங்கள் கழித்து திரும்ப வருவதாக வாக்களித்துவிட்டு சென்றார்.

பத்ரிநாத் செல்லும்வழியில் வாரணாசியில் ஸ்ரீ கிருஷ்ண சரஸ்வதியிடம் சன்யாச தீக்ஷை ஏற்றார்.

இன்றும் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் பீடாதிபதியாக வருபவர்கள் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகளும் மற்றும் நெரூரில் உள்ள ஸ்ரீ ஸதாசிவ ப்ரமேந்திர ஸ்வாமிகளையும் வணங்குவதை ஸம்ப்ரதாயமாக வைத்துள்ளனர்.

இவர் தனது கடைசி 20 வருடங்கள் குல்பர்கா அருகில் உள்ள ஸ்ரீ கானகாபூரில் வாழ்ந்தார். இவரால் குருவபுரம் மற்றும் கானகாபூர் புண்ணிய க்ஷேத்ரங்களாக விளங்கின.

**மெய் சிலிர்க்கும் அற்புதங்கள் பல:**

- தனது முந்தைய அவதாரத்தில் தன்னை வணங்கிய பெண்ணிற்கு அடுத்த ஜென்மத்தில் மகனாக பிறந்தது.
- தனது பக்தனான வண்ணானை அடுத்த ஜென்மத்தில் மன்னனாக பிறக்க வைத்தது.
- இறந்தவர்களை உயிர்ப்பித்தது.
- பாஸ்கரன் என்னும் ஏழை அந்தணனின் மலட்டு எருமை பால் சுரந்தது.
- 65 வயதான கங்காபாய்க்கு மகப்பேறு வழங்கியது. இவர்களுக்கு பிறந்த சரஸ்வதி என்னும் பெண்ணிற்கு மாபெரும் புகழ் மிக்க ஒருவர் கணவனாக வருவார் என்ற குரு வாக்கிற்கு ஏற்ப, பரம அத்வைதியான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் கணவனாக வரும் பாக்கியம் குருவின் கிருபையினால் கிடைத்தது.
- ஓர் அந்தணனின் தீராத வயிற்று வலியை தீர்த்தது.
- சாயம்தேவன் என்னும் பக்தனுக்காக முகமதிய மன்னனுக்கு தக்க பாடம் புகட்டியது.
- குருவை தவறாக புரிந்த ஒருவனுக்கு குரு மஹிமையை விளக்கி கூறியது.
- அறிவற்ற அந்தண சிறுவனுக்கு பேசும் திறனை அளித்து அவனை மேதையாக்கியது.
- ஏழை அந்தணனின் வீட்டிற்கு பிட்சைக்கு சென்று அங்கிருந்த அவரைக்கொடியை அறுத்து பானை நிறைய பொன்னை அளித்த நிகழ்வு.
- பிரம்மராக்ஷசன் சாபத்திலிருந்து ஒரு பெண்ணை விடுவித்து, அவளின் பிள்ளை இறந்தபொழுது ஞானம் புகட்டி இறந்த குழந்தையை மீண்டும் உயிர்ப்பித்து.
- விஸ்வரூப தரிசனம் அளித்து த்ரிவிக்ரம பாரதி என்னும் பண்டிதனுக்கு அருள் புரிந்தது.
- படிப்பறிவற்ற மாதங்கன் என்பவனை வைத்து இரு கர்வமிக்க அந்தணர்களின் செருக்கை அகற்றியது.
- பாஸ்கரன் என்னும் ஏழை அந்தணன் சமைத்த மிக சிறிய உணவை பல்லாயிரம் மக்கள் உண்ட அற்புதம்.
- நரகேசரியின் தொழுநோயை குணப்படுத்தி கல்லேஸ்வரராக காட்சி அளித்தது.
- நெசவாளியாகிய தனது உண்மையான பக்தனுக்கு ஸ்ரீ சைலம் ஸ்ரீ மல்லிகார்ஜுனனாக காட்சி அளித்தது.
- நந்தி சர்மாவின் தீர்க்க முடியாத வெண்குஷ்டத்தை நீக்கியது.
- எட்டு வடிவங்கள் எடுத்து எட்டு இடங்களில் பக்தர்களை அனுகிரஹித்தது.
- விவசாயி பர்வதேசனின் வயலில் 10 மடங்கு மகசூல் கிட்டும்படி செய்தது.

இப்படி இவர் புரிந்த மகிமைகள் ஏராளம். இவரை பற்றி ஸ்ரீ குருசரித்ரம் என்னும் புண்ணிய நூலில் மிக மிக விரிவாக காணலாம்.

பஹுதான்ய ஸம்வத்ஸரத்தில் (1458 கி.பி) பிரஹஸ்பதி கன்னியிலிருக்க, மாக மாசம் கிருஷ்ணபக்ஷம் பிரதமை வெள்ளிக்கிழமை புண்ணிய தினத்தன்று ஸ்ரீ சைலம் மல்லிகார்ஜுனருடன் ஐக்கியமானார்.

300 வருடங்கள் ஸ்ரீ சைலத்தில் ஸ்ரீ மல்லிகார்ஜுனத்தில் உள்ள கதலி வனத்தில் குப்தமாக இருந்து, அதன் பிறகு ஸ்ரீ சுவாமி சமர்த்தராக திரு அவதாரம் புரிகிறார்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593





# சாரமேயாதனம்

கலியுகம் என்றாலே அநீதிகள் தலைவிரித்தாடும் காலமாகும். ஆனாலும் இந்த அநீதி புரிபவர்களுக்கும் தண்டனையை வரையறுத்து கூறியுள்ளனர் நமது முன்னோர்கள்.

கலியுகத்தில் மக்கள் அவதிப்படுவதற்கு காரணமானவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதை பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே கருட புராணத்தில் குறிப்பிட்டுள்ளது.

அநீதியை எதிர்த்து கேள்வி கேட்கும் மக்கள் ஒருபுறமிருந்தாலும், கேள்வி கேட்க பயப்படும் மக்களை, வாட்டி வதைக்கும் கொடுரர்கள், தாங்கள் வசதி வாய்ப்புடன் வாழ்வதற்காக, பெரும் பாலா மக்களை துன்பப்படுத்தி அவர்களின் தோழில் சவாரி செய்வதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

தன்னுடைய இன்பத்திற்காக செய்யும் செயலின் விளைவாக ஏற்படும் விளைவையே, கொடிய நரகத்தில் அதே முறையில் துன்பமாக மாறி அதை அவர்கள் அனுபவிப்பார்கள் என்கிறது கருட புராணம்.

பூமியில் வாழும் பொழுது எந்த சுகம் இன்பமாக இருக்கின்றதோ, அதே சுகம் மற்றவர்களுக்கு துன்பத்தைஅளிக்கும்விதமாகஇருக்கும்பட்சத்தில் அந்த சுகத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையும் வேதனையால் அதில் இச்சை கொண்டு ஈடுபட்ட மனிதர்கள் இறந்த பின்பு அவர்கள் கொண்ட இச்சையினாலேயே இந்த நரகத்தை சென்றடைந்து அவர்களுக்கான துன்பத்தை அவர்களே உருவாக்கிக் கொள்கிறார்கள்.

மற்றவர்களின் மீது கொண்ட கோபத்தினால் அவர்கள் குடிகொண்டு இருக்கும் வீடுகளுக்கு தீ வைப்பதும், மற்றவர்கள் வைத்திருக்கும் பொருட்களின் மீது ஆசை கொண்டு அவர்களிடமிருந்து அந்த பொருட்களை பறித்துக் கொள்வதும், பூமியில் வாழும் பொழுது பொருளை சூறையாடி சேர்த்த மனிதர்கள் இறந்த பின்பு அடைகின்ற நரகம் என்பது சாரமேயாதனம் ஆகும்.

தன்னுடைய தேவைகளுக்காக வாயில்லா ஜீவன்கள் குடி கொண்டிருக்கும்வனங்களை அழிக்கக்கூடியவர்களும், அந்த உயிரினங்களுக்கு கொடூரமான முறையில் விஷத்தை கொடுப்பவர்களும் இந்த நரகத்தை அடையக்கூடியவர்கள் ஆவார்கள்.

பொருள் செல்வத்திற்காக ஆசைப்பட்டு தன் குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது நெருக்கமானவர்களுக்கு அல்லது தன்னை சார்ந்து இருப்பவர்களுக்கு விஷம் கொடுத்து அவர்களை கொன்றுவிடுவார்கள்.

அதன் மூலம் பொருளீட்டி சொகுசாக இந்த பூமியில் வாழ்ந்த நயவஞ்சகர்கள் இறந்த பின்பு சென்று சேரும் நரகம் என்பது இந்த நரகமாகும். எவர் மீதோ இருக்கக்கூடிய கோபத்தினாலும், அவர்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலும் கூட்டம் கூட்டமாக மக்களைக் கொன்று குவிக்கக்கூடியவர்கள் இறந்த பின்பு அடையும் நரகம் இந்த நரகமாகும்.



# பெண்களை போற்றும் இந்து மதம்

நிஷ்காம கர்மயோகத்தை கீதையில் கிருஷ்ணர் முன்வைத்து ஒருசில ஸ்லோகங்களை கூறியுள்ளார்.

இந்த நிஷ்காம கர்மயோகம் என்பது "யாரையும் வெறுக்கக் கூடாது, எதிலும் நடுநிலைமையை கடைபிடிக்க வேண்டும்" என்பதே இதன் உட்பொருள்.

மனிதர்கள், ஆண், பெண், விலங்குகள், பறவைகள், புழு, பூச்சி, தாவரம் போன்ற அனைத்தையும் நடுநிலையோடுதான் பார்க்கவேண்டும் என்பது உட்பொருள்.

இதை மையப்படுத்தி பார்த்தால், உலக அளவில் பெண்களுக்குமுக்கியத்துவம் தருவது இந்துமதம் மட்டுமே...

பெண்களை மதித்து பெண் விருப்பபடி மணமகனை தேர்ந்தெடுக்க சுயம்வரமும், பாஞ்சாலி போல அவளே முடிவெடுக்கும் உரிமையும் பெண்களுக்கு இந்து மதம் கொடுத்திருந்தது.

உலக மதங்களில் பெண் தெய்வங் களை அதிகம் கொண்டதும் இந்து மதம் தான். அப்பக்கா, மங்கம்மா போன்றவர்கள் ராணிகளாகவும், அரச னுக்கு நிகராக அவ்வையாரே மதிக்கப்பட்டதும் இந்து நாட்டில்தான்.



**மகாபாரதத்தில் முக்கிய முடிவுகளை குந்தியும், காந்தாரியுமே எடுத்தனர். ராமயண விதியெல்லாம் கைகேயிடமும் சீதையிடமும் இருந்தது.**

மக்களிடம் தீய விஷக்கருத்தை பரப்பி அதன்மூலம்அரசியல் செய்து, குளிர்காயவிரும்பும் விஷமக்காரர்களின் போலிமனுதர்மத்தைப் பற்றி 6ம் பக்கத்தில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் அதிகப்படியான பெண் தெய்வங்களைக் கொண்ட மதமாகவும், பெண்களை மதிப்புடன் ஆராதிக்கும் ஒரே மதமாகவும் திகழ்வது இந்து மதம் மட்டுமே. ஆண், பெண் வேறுபாடு பார்க்காமல் தெய்வ நம்பிக்கையில் அனைவரையும், நன்னெறியில் உன்னத வாழ்க்கைப் பாதையில் அழைத்துச் செல்வதால் உலக அளவில் அனைவராலும் நேசிக்கப்படும் இந்துமதத்தின், மனுதர்மத்தில் பெண்களுக்கு எவ்வாறு மதிப்பு தரப்படுகிறது என்பதைப்பற்றி ஒரு சில ஸ்லோகங்களை பார்ப்போம்.

மனு ஸ்மிருதி 356

யத்ர நார்யாஸ்து பூஜ்யந்தே ரமந்தே
தத்ர தேவதாயத்ரைதாஸ்து ந
பூஜ்யந்தே ஸர்வாஸ்தத்ர அபலா க்ரியா

பெண்கள் எங்கே மதிக்கப்படுகிறார்களோ, அங்கு இறைவன் குடியிருந்து அருள்புரிவான். பெண்கள் எங்கே அவமதிக்கப்படுகிறார்களோ, அங்கே செய்யும் அத்தனை நற்செயல்களும் வீண் போகும்.

மனு ஸ்மிருதி 93

பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா
ரக்ஷதி யௌவனே ரக்ஷந்தி ஸ்தவிரே
புத்ரா ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யம் அர்ஹதி

உயர்ந்த மணிபோன்ற, ரத்தினம் போன்றவளான பெண்மணியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இளம் வயதில் தந்தையும், வளர்ந்த பின் கணவனும், வயதான காலத்தில் மகன்களும் பெண்ணைப் பாதுகாக்க வேண்டும்.

மனு ஸ்மிருதி 355

பித்ருபிர் ப்ராத்ருபிச் சைதை பதிபிர்
தேவரைஸ் ததா பூஜ்யா பூஷயிதவ்யாச்ச
பஹு கல்யாணம் ஈப்ஸுபி

தந்தை, சகோதரர், கணவர், மைத்துனர் போன்ற ஒவ்வொருவரும் தாங்கள் நலமாக வாழ நினைத்தால், அவரவர் வீட்டில் உள்ள பெண்களை மதித்துக் கௌரவிக்க வேண்டும்.

மனு ஸ்ம்ருதி 358

ஜாமயோ யானி கேஹானி சபந்தி அப்ரதிபூஜிதா
தானி க்ருத்யாஹதானீவ வினச்யதி ஸமந்தத

எந்தெந்த இடங்களில் பெண்கள் தகாத, அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் இகழப்பட்டு, அவமானப்படுத்தப் படுகிறார்களோ, அந்த இடமே விஷம் உண்டவன் அழிவது போல் அழிந்துபோகும்.

மனு ஸ்ம்ருதி 926

ப்ரஜனார்த்தம் மஹாபாகா பூஜார்ஹா
க்ருஹதீப்தய ஸ்த்ரிய ஸ்ரீயச்ச
கேஹேஷு ந விசேஷோஸ்தி கச்சன

தாய்க்குலமான பெண்கள் போற்றத்தக்கவர்கள், வணங்கத் தக்கவர்கள், இல்லத்தின் விளக்காய் விளங்குபவர்கள், வீட்டின் மகாலட்சுமியாய்த் திகழ்பவர்கள்.

மனு ஸ்ம்ருதி 911

அர்த்தஸ்ய ஸங்க்ரஹே சைனாம்
வ்யயே சைவ நியோஜயேத்
சௌசே தர்மே அன்னபக்த்யாம்
ச பாரிணாஹ்யஸ்ய சேக்ஷணே

வீட்டின் பொருளாதாரம், தூய்மை, சுகாதாரம், வீட்டில் நடக்கும் வழிபாடுகள், உண்ணும் உணவு ஆகிய விஷயங்களில் பெண்கள் முழு சுதந்திரத்துடன் செயல்பட வேண்டும்.

மனு ஸ்ம்ருதி 990

ஊர்த்வம் து காலாத் ஏதஸ்மாத்
விந்தேத ஸத்ருசம் பதிம்

வயது வந்த பெண், தனது கணவனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

மனு ஸ்ம்ருதி 9130

யதைவாத்மா தத புத்ர புத்ரேண துஹிதா ஸமா
தஸ்யாம் ஆத்மனி திஷ்டந்த்யாம் கதம்
அன்யோ தனம் ஹரேத்

மகனுக்கு நிகராக மகளையும் கருத வேண்டும். தந்தைக்கு ஒரு மகள் இருக்கும் போது, வேறொருவர் எப்படி அவர் சொத்தைக் கொண்டு செல்ல முடியும், மகளுக்கே சொத்தில் உரிமை உண்டு.

மனு ஸ்ம்ருதி 828

வசா அபுத்ராஸு சைவம் ஸ்யாத்
ரக்ஷணம் நிஷ்குலாஸு ச பதிவ்ரதாஸு ச
ஸ்த்ரீஷு விதவாஸ்வாதுராஸு ச

பிள்ளையில்லாத, கணவனை இழந்த பெண்களோ, அல்லது கணவனைப் பிரிந்து தனியாக வாழும் பெண்களோ நாட்டில் இருந்தால், அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

மனு ஸ்ம்ருதி 8352

பரதாராபிமர்சேஷு ப்ரவ்ருத்தான் ந்ரூன்
மஹீபதி உத்வேஜன கரைர்தண்டை
சின்னயித்வா ப்ரவாஸயேத்

பெண்களின் கற்புக்குக் கேடு விளைவிக்கும் ஆண்களுக்கு அதிகபட்ச தண்டனை கொடுக்க வேண்டும். பிறர் இத்தகைய தவறைச் செய்வதற்கே அஞ்சும் அளவுக்கு அந்த தண்டனை இருக்க வேண்டும்.


ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆன்மீக வழியில் அமைதி

5

இறைவன் அருள்பெற்ற ஞானிகள் வாழ்க்கைத் தத்துவங்களை தர்ம சாஸ்திரங்களின் மூலம், நாம் மன அமைதியுடன் வாழ்வதற்கு வழி காட்டியுள்ளனர். உலகில் உள்ள நன்மை தீமைகளை பிரித்து அறிந்து கொள்ளக்கூடிய அறிவுத்திறனையும் மனிதர்களுக்கு இயல்பாகவே கடவுள் அருளியிருக்கிறார். மனிதர்களில் பலர் தங்கள் வாழ்வின் ஆரம்பத்தில் இதனை உணர்வதில்லை. உலகில் வாழும் யானை, சிங்கம் புலி போன்ற விலங்குகள், கிளி, காகம் மயில் போன்ற பறவைகள் ஊர்வன போன்ற உயிரினங்களுக்கு மனிதர்களைப்போல பகுத்தறியும் தன்மை அவை களுக்கு இல்லை. இன்பம் துன்பம் எதையும் மனதளவில உணர்ந்து அனுபவவிக்கக்கூடிய சக்தியும் மனிதனிடம் மட்டும்தான் உள்ளது. எனவே தமிழ் மூதாட்டி ஔவையார் மனித பிறவியின் உயர்வைப் பற்றி ‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது’ என்று பாடி யுள்ளார்.

உலகில் பொதுவாக ஒருவருக்கு எந்தப்பொருள்களின் மீது ஆசைப்படுகிறமோ அந்தப்பொருள்கள் மூலமாக வரக்கூடிய இன்பங்கள் மகிழ்ச்சி போன்ற அனுபவங்கள் கிடைக்கிறதோ, அதேபோன்றுதான் மற்றவர்களுக்கும் அந்தப்பொருள்கள் மீது உள்ள ஆசையும் அந்தப் பொருள்களினால் வரக்கூடிய இன்பத்தையும் சுகத்தையும் விரும்புவார்கள். எடுத்துக்காட்டாக ‘தன்னிடம் இருக்கும் நகை போன்ற விலையுயர்ந்த பொருட்களை யாரும் நம்மிடமிருந்து அபகரித்து விடக்கூடாது’ என்று பெரும்பாலும் நினைக்கிறோம்.



அதேபோல் தான் மற்றவர்களும் தங்களிடம் இருக்கும் நகை போன்ற விலையுயர்ந்த பொருட்களை யாரும் தங்களிடமிருந்தும் அபகரித்து விடக்கூடாது என்றுதான் விரும்புவார்கள். நம்முடைய மனதில் நம்மை அறியாமல் தோன்றும் இத்தகைய எண்ணங்களை, நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் ‘திருடக்கூடாது’ என்ற அறிவினை இதன்மூலம் அறிந்து கொள்கிறோம். இதன்மூலம் நாம் என்ன உணர்கிறோம் என்றால் நாமும் திருடக்கூடாது, நம்மைப்போல் மற்றவர்களும் திருடக்கூடாது என்றும் மனதிற்குள் நல்ல தையே நினைக்கின்றோம். அதுதான் தர்மம் என்றும் மனதிற்குள் நினைத்து முடிவுக்கும் வந்துவிடுகிறோம்.

அதேபோன்று மற்றவர்கள் நம்மிடம் எந்த விஷயம் பற்றி பேசினாலும்,அவர்கள் நம்மிடம் பொய் பேசாமல் உண்மையே பேசவேண்டும் என்று நாம் மனதிற்குள் விரும்புகிறோம். அதேபோன்று நாமும் மற்றவர்களிடம் பேசும்போது ‘பொய் பேசாமல் இருக்கவேண்டும் உண்மையே பேசவேண்டும்’ என்று நம் மனதிற்குள் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

மற்றவர்கள் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் நம்மை அறியாமல் மனதிற்குள் விரும்புகிறமோ, அதேபோன்றுதான் நாமும் மற்றவர்களிடம் உண்மையுடன் நடந்து கொள்ளவேண்டும் என்று உறுதி மனதில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் சாஸ்திரங்கள் புராணங்கள் இதிகாசங்கள் கதைகள் மூலம் நமக்கு வலியுறுத்திக் கூறுகின்றன.

இதற்கு எடுத்துக்காட்டாக மகாபாரத்தில் ஒரு நிகழ்வு. யுத்த தர்மத்தில் யுத்தம் தொடங்குவதற்கு முன் போரில் வெற்றி பெறுவதற்கு நல்ல நாள் நல்ல நேரம் பார்த்து களப்பலி கொடுப்பது அக்காலத்தில் வழக்கம். அதன்படி துரியோதனன் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு, தான் அந்தப்போரில் வெற்றி பெறுவதற்கு களப்பலி கொடுப்பதற்கு நல்லநேரம் பார்ப்பதற்கு தனது எதிரியான பஞ்சபாண்டவர்களில் ஒருவனான சகாதேவனை அணுகினான்.

சகாதேவன் சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி கணித்து போர்க்களத்தில் களப்பலி கொடுப்பதற்கு நல்லநேரம் பார்த்து தனக்குக் கூறுவான் என்ற நம்பிக்கையுடன், போரில் களப்பலி கொடுப்பதற்கு நல்ல நேரம் பற்றி கேட்டான். துரியோதனுக்கு சாஸ்திரப்படி போரில் களப்பலி கொடுப்பதற்கு நல்லநாள் நல்லநேரத்தை துல்லியமாக கணித்து சகாதேவன் கூறுகிறான். துரியோதனன் தங்களின் எதிரி என்று சகாதேவன் அறிந்திருந்தும், சோதிட சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி துரியோதனனுக்கு போரில் களப்பலி கொடுப்பதற்குரிய நல்லநாள் நல்லநேரம் பார்த்துக் கொடுத்தான் என்பது மகாபாரதம் உணர்த்தும் கதையாகும். சகாதேவன் நினைத்திருந்தால், துரியோதனுக்குப் பாதகமான

www.aanmeegamalar.com

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நேரத்தினை நல்ல நேரம் என்று கூறியிருக்கலாம். அவன் அவ்வாறு நம்பிக்கைத்துரோகம் செய்யவில்லை. சோதிடசாஸ்திரப்படி தர்மசாஸ்திரப்படி சகாதேவன் பகைவன் என்று தெரிந்திருந்தும் துரியாதனிடம் நல்ல நேரம் கணித்துக் கொடுப்பதில் நடந்து கொண்டான் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

உலகில் மனிதர்களின்வாழ்வை அளவுகோலாக வைத்துக்கொண்டு தான் தர்ம நியாயங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நியாயம் அநியாயங்களை தெரிந்து கொள்ளவும்இறைவன் நமக்கு அறிவையும் அதன்படி நடக்கவும் வலிமை யையும் கொடுத்துள்ளார். 'திருடக்கூடாது' 'பொய் சொல்லக்கூடாது' 'பிறர் மனம் புண்படும்படி பேசக்கூடாது' என்று சான்றோர்கள் தங்கள் அனுபவங்களை சாஸ்திரங்களின் மூலம் தத்துவங் கள் மற்றும் இதிகாசங்களிலிருந்து சிறுகதைகள் மூலம் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

மனிதர்கள் தங்கள் வாழ்வின் உண்மை நிலை யை அறிந்து கொண்டால் உணர்ந்து கொண்டால் அவன் விரும்பும் மன அமைதி தானாகவே வந்து சேரும். இதிகாசங்கள் புராணக்கதைகள் தர்ம சாஸ்திரங்களை முழுமையான ஈடுபாட்டுடன் படிக்கும்போது, ஆன்மீக அன்பர்கள் கூறக் கேட்கும்போது நமக்கு வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியம் நம்மை அறியாமல் தோன்றிவிடும்.

மிருகங்கள், பறவைகள் ஊர்வன போன்ற உயிரினங்களுக்கு நல்லவை, கெட்டவை எவை என்று தேர்ந்தெடுக்கும் அறிவுத்திறன் இல்லை. மனிதர்களுக்கு மட்டும் தன்னை அறிந்து கொள்வதற்கு ஆன்மீக வழியில் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதற்கு தர்ம சாஸ்திரங்கள் இதிகாச புராணங்களில் பல வழி முறைகள் உள்ளன.

அவைகல்பற்றி அறிந்து கொள்ளக்கூடிய அறிவுத்திறனும் மனிதர்களுக்கு இருக்கிறது. நாய்க்கு தான் ஒரு நாய் என்ற உருவத்தில் இருக்கி றேன் என்பதுகூட அதற்குத் தெரிவதில்லை. அப்படி தன்னோட உருவத்தைப் பற்றி தெரிந்து கொள்ளவும் அது விரும்புவதில்லை. நாய் போன்ற விலங்குகள், பறவைகள், ஊர்வன மற்ற உயிரினங்களும் தங்கள் உருவத்தைப்பற்றி நினைத் துக்கூட பார்ப்பதில்லை. மனிதனைப்போல உயர்வு தாழ்வு மனப்பான்மை போன்ற மற்ற கவலைகள் விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்ற உயிரினங்களுக்கு இருப்பது இல்லை.

காகம் தன்னோட நிறம் கருப்பாக இருக்கிறது என்று கவலைப்படுவ தில்லை. இதனை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும். காகத்தின் முன்பாக ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்தால், நம்மைப்போல் அது தன்னை கண்ணாடியில் கவனமாக பார்ப்பதில்லை. அப்படி கண்ணாடியில் மனிதனைப்போல் கவனமாக காகம் தன்னைப் பார்த்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அது தான் கருப்பாக இருக்கிறோம் என்று நினைத்து அவைகள் வருத்தப்பட்டுக்கொண்டு நம்மைப்போல் அதுவும் விருப்பமான சிவப்பு நிறத்தில் தன்னோட உடம்பெல்லாம் 'டை' அடிக்க ஆரம்பித்து விடும். அதேபோல் காகம் தன்னோட குரல் குயிலின் குரலோடு ஒப்பிட்டுப் பார்க்க நினைப்பதில்லை. அவ்வாறு குயிலைப் போன்று தன்னோட குரலையும் இனிமையாக மாற்றுவதற்கு நினைத்தால் அதுவும் நம்மைப்போல் கழுத்து அளவில் இருந்து தண்ணீரில் இறங்கி சாதகம் செய்வதற்கு ஆரம்பித்து விடும்.

விலங்குகள் போன்ற மற்ற உயிரினங்களுக்கு எல்லாம் தன்னைப்பற்றி அறிந்து கொள்ளக்கூடிய திறன் எதுவும் இல்லை. யானைக்கு, மனிதனைவிட மற்ற விலங்குகளை விட பெரிய உடம்பும் சக்தியும் இருப்பதுகூட அதற்குத் தெரிவதில்லை. அது தன்னோட உடல் பலத்தைப் பற்றி அறிந்து விட்டால், அல்லது கடவுள் அதற்கு உடல் பலத்தை அறிந்து கொள்ளும்படி அறியும்படி செய்திருந்தால் , மனிதன், யானையை தன்னோட இஷ்டப்படி வேலை செய்யும்படி, அதனை அடக்கி ஆள முடியுமா என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மனிதனுக்கு மட்டுமே தன்னை அறிந்து கொள்வதற்கு அறிவு மற்றும் அனுபவம் மூலமாக கடவுள் அருளிருக்கிறார். மனிதன் தன்னோட வாழ்வில் மனஅமைதியை பெறுவதற்கு அறிவு ஆன்மிகம் மூலமாக வழிமுறைகளை நாள்தோறும் தேடிக் கொண்டிருக்கிறான்.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308





# தீபாவளியின் சாஸ்திரம்

தீபாவளியின்போது ப்ரம்மாண்டத்திலிருந்து சைதன்யம் பூமிக்கு அதிகமாக வருகிறது. வாசனைப்பொடியின் ஸாத்வீகத்தால் உடலுக்கு சைதன்யத்தை கிரஹிக்கும் சக்தி அதிகமாவதால் குளிப்பதற்கு முன் எண்ணெயில் வாசனைப்பொடியின் கலந்து தேய்த்து குளிக்கவும்.

எண்ணெய் தீபம், ஒரு மீட்டர் பரப்பளவிற்கு, ஸாத்வீக அதிர்வலைகளை க்ரஹித்து வெளியிடுகிறது. ஆனால் மெழுகுவர்த்தி மற்றும் மின்சார விளக்குகளிலிருந்து ரஜ தம அணுக்களே வெளிவருகின்றன.

## தீபாவளியின் உள்ளர்த்தம்

கோவத்ஸ த்வாதசி: கோமாதா பூஜை செய்து அவற்றின் ஸாத்வீக குணத்தை நமக்குள் கொண்டு வருதல்

தன த்ரயோதசி: தர்ம காரியங்களுக்காக அர்ப்பணம் செய்வதால் தனலக்ஷ்மி நிரந்தரமாக தங்குகிறாள்

நரக சதுர்த்தசி: நம்முள் இருக்கும் நரக ரூபி பாபகர்மாக்கள் மற்றும் அஹம்பாவத்தை போக்குதல்

லக்ஷ்மி பூஜை: அஹம் மற்றும் மாசைக் களைய லக்ஷ்மி மற்றும் சரஸ்வதி பூஜை செய்தல்

பலிப்ரதிபதா: பலி சக்கரவர்த்தியை நினைவு கூர்தல்

தீபாவளியில் லக்ஷ்மிபூஜை

தீபாவளி அன்று தனத்தின் சின்னமான தனியாவையும் செல்வ த்தின் சின்னமான நெல்பொறியையும் அர்ப்பணித்து லக்ஷ்மி தேவியை பூஜிப்பதால் லக்ஷ்மி தத்துவத்தின் பயன் கிடைக்கிறது. இந்த செல்வம் தர்ம காரியங்களுக்கு பயன்பட்டும் என பிரார்த்திக்கவும்.

நாடு மற்றும் தர்மத்திற்கு தீங்கிழைக்கும் பட்டாசுகள்!


30 கோடி இந்தியர்கள் வறுமையில் வாடும் போது ஆடம்பரத்திற்காக பட்டாசுக்காக பணத்தை வீணாக்குவது நியாயமானதல்ல!

பட்டாசுகளின் சப்தத்தாலும் புகையாலும் சுற்றுப்புற சூழல் பாதிக்கப்பட்டு, தாமஸீக தீய சக்திகள் ஆகர்ஷிக்கப்படுகின்றன !

உரத்த சப்தத்தால் காது கேளாமல் போதல், கைகள் கால்களில் தீப்புண் ஏற்படுதல், பட்டாசு தொழிற்சாலைகளில் தீவிபத்து ஏற்படுதல் போன்ற தீய விளைவுகள் ஏற்படுகின்றன !

பட்டாசுக்காக செலவழியும் பணத்தை நாட்டிற்காகவும் தர்மத்திற்காகவும் அர்ப்பணிக் கவும்!

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626



Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்







